விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 18 சனிக்கிழமை (01.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 103

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# ஐ.ம.சு.மு. அமோக வெற்றி

## ஐ.தே.கவுக்கு 34 இடங்கள்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மையான உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றி அமோக வெற்றியீட்டியுள்ளது.

நாடெங்கிலுமுள்ள 330 உள்ளூராட்சி மன்றங்களில் 226 மன்றங்களுக்கு நேற்றுமுன்தினம் தேர்தல் நடைபெற்றது.

இவற்றில் 55 வீதமானோர் வாக்களித்தனர். இதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி 224 சபைகளைக் கைப்பற்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 34 சபைகளையும் தமிழரசுக் கட்சி 5 சபைகளையும் கைப்பற்றியுள்ளது. இனவாதக் கட்சியான ஜே.வி.பி. தனித்துப் போட்டியிட்டபோதும் அக்கட்சியினால் ஒரேயொரு சபையை மட்டுமே பெறமுடிந்துள்ளது.

இலங்கை ஜனநாயக ஐக்கிய முன்னணி மலையகத்தில் தலவாக்கல விந்துலை நகரசபையைக் கைப்பற்றியது. சுயேட்சைக்குழுவொன்றும் வெற்றிபெற்றுள்ளது.

தமிழரசுக்கட்சி கிழக்கில் அமோக வெற்றிபெற்றுள்ளது. திருமலை பட்டணமும் சூழலும் நகரசபை, ஆலையடிவேம்பு பிரதேசசபை உட்பட ஐந்து உள்ளூராட்சி சபைகளை வென்றுள்ளது. திகாமடுல்ல மாவட்டத்தில் மூன்று இடத்தைக் கைப்பற்றியுள்ளது.

இதேவேளை ஹெலஉறுமயக் கட்சிக்கு எதிர்பார்த்தளவு வெற்றிபெறமுடியாமல்போனமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன் னணி என்பன அரசுடன் இணைந்து போட்டியிட்டபோதிலும் அவற்றால் வெற்றிபெறமுடியவில்லை. (ச-4)

# பாராளுமன்றத்தை கலைத்து

# விரைவில் பொதுத்தேர்தல்!

## ஜனாதிபதி முடிபு செய்துள்ளதாகத் தகவல்

(கொழும்பு)

**பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தல் ஒன்றினை நடத்துவதற்கு ஜனாதிபதி முடிபு செய்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

**உள்ளூராட்சித் தேர்தலில் மாபெரும் வெற்றிபெற்றுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பொதுத் தேர்தலிலும் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையில் ஜனாதிபதி இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதன்மூலம் ஜே.வி.பியின் மிரட்டல்களுக்கும் எதிரான செயற்பாடு களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியுமென ஜனாதிபதி நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.**

(12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

ஆசிரியர் தலையங்கம்:

யாழ். மின்சாரசபையிடம் கேள்வி


## இராணுவத் தளபதி நேற்று யாழிற்கு திடீர் விஜயம்!



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக முப்படைகளின் கட்டளைத் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

## 3 நாள் உத்தியோக விஜயமாக ஜனாதிபதி பாகிஸ்தான் பயணம்



(கொழும்பு)

ஜனாதிபதி ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று பாகிஸ்தான் சென்றடைந்தார். சக்லாலா நகரில் அமைந்திருக்கும் விமானப் படைத் தளத்தைச் சென்றடைந்த ஜனாதிபதி ராஜபக்ஷவை பாகிஸ்தான் பிரதமர் ஸௌகட் அஸீஸ் வரவேற்றார். ஜனாதிபதிக்கு மதிப்பளிக்கும் வகையில் சக்லாலா விமானப்படைத் தளத்தில் 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதோடு, பாகிஸ்தான் விமானப்படையினரால் மரியாதை அணிவகுப்பும் வழங்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய க.கா.குழுத்தலைவர் இன்று பொறுப்பேற்கிறார்

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் இன்று தனது பொறுப்புக்களை ஏற்கவுள்ளார். மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவராக நிய மிக்கப்பட்டுள்ளதுடன் இன்றுமுதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டுமுதல் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவராகக் கடமையாற்றிய ஹக்ரூவ் ஹொக்லண்டின் வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இவர் அரச, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை கடந்த வாரம் சந்தித்துப் பேசியமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:

021 - 222 3891, 222 6297, 077 - 2349999,

011 - 2372952/3, 011 - 2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.



எக்ஸ்போ எயார்



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜிகாத் குழுவுடன் தொடர்பில்லை விளக்கமளிக்கிறது பாகிஸ்தான்

இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தில் இயங்கும் ஜிகாத் குழுவுக்கும் பாகிஸ்தானுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என்று இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதரகம் விளக்கம் அளித்துள்ளது.

அண்மையில் அவுஸ்திரேலிய 'ஏபிசி' தொலைக்காட்சி ஒன்றுக்கு நேர்காணல் அளித்த தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், ஜிகாத் குழுவுக்கும் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐக்கும் தொடர்பிருப்பதாகக் கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பாகிஸ்தான் தூதரகப் பேச்சாளர் ஜகூர் அகமெட் பர்லாஸ் கூறுகையில்,

இத்தகைய குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லை. இறையாண்மையுள்ள இதர நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பதில் பாகிஸ்தான் உறுதியாக உள்ளது.

இந்தப்பிரச்சினை தொடர்பில் பாகிஸ்தான் அரசாங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் இறையாண்மைக்கும் பிரதேச ஒற்றுமைக்கும் எப்போதும் பாகிஸ்தான் ஆதரவளித்தே வந்துள்ளது என்றார். (கு)

# சிங்கள அரசுக்கு இந்தியா உதவி செய்யக் கூடாது

## ம.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் தெரிவிப்பு

இலங்கையில் போர் மூளுமானால் இந்தியா எந்தவிதத்திலும் சிங்கள அரசுக்கு உதவி செய்யக் கூடாது என்பதற்காக ம.தி.மு.க. அனைத்து கட்சிகளிலும் ஈடுபடும் என்று தமிழகத் தேர்தலையொட்டி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ம.தி.மு.க.தலைமைச் செயலகத்தில் வைத்து கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ ம. தி.மு.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வைத்தார்.

அந்த அறிக்கையில் இலங்கை விடயம் குறித்து மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கைத் தமிழர்களுக்கு தமிழகத்திலுள்ள கல்லூரிகளில் வழங்கப்பட்டு வந்த இட ஒதுக்கீடு மீண்டும் தொடர்வதற்கு நடவடிக்கை மேற் கொள்வோம்.

நதி நீர்ப்பிரச்சினையில் நடுவர் மன்ற ஆணையை மாநிலங்கள் செயற்படுத்தும் விதத்தில் மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அரசியல் சட்டதிருத்தம் செய்ய வலியுறுத்துவோம் அதே போல் கச்சதீவை இலங்கை அரசிடமிருந்து திரும்பப் பெறுமாறு மத்திய அரசை வலியுறுத்துவோம்.

மேலும் ஈழத்தமிழர் இனப் பிரச்சினைக்கு அமைதிப் பேச்சு வார்த்தையின் மூலம் நிரந்தர தீர்வு ஏற்படுவதற்கு மத்திய அரசு ஆக்க



பூர்வமான பங்களிப்பை செய்திட வேண்டும் என்று வலியுறுத்துவோம். அதேசமயம் இலங்கையில் போர் மூளுமானால் இந்தியா சிங்கள அரசுக்கு எந்த விதத்திலும் உதவி செய்யக்கூடாது என்பதற்காக ம.தி.மு.க. அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடும் என்றும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (கு)

# வற்வரி மோசடி தொடர்பில் கப்பல் அதிபரிடம் விசாரணை

இலங்கையை உலுக்கி வரும் பல கோடிரூபா வற்வரி மோசடி தொடர்பாக முக்கிய கப்பல் அதிபர் ஒருவரிடம் இரகசியப் பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வற்வரி மோசடியில் கைதுசெய்யப்பட்ட நபர்களுக்குப் பின்னணியில் இருந்து செயற்பட்டவரே இவர் என்றும் இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே வற்மோசடி வழக்கில் தனியார் நிறுவனம் ஒன்றின் நிர்வாக அதிகாரியாக இருந்த எஸ்.சுப்பிரமணியம் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டார். அவரிடம் இரகசியப் பிரிவு பொலிஸார் பல மணிநேரம் விசாரணை நடத்தினர். அதன் பின்னர் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை நீதிமன்றில் அவர் முன்னிலைப் படுத்தப்பட்டார். அவருடன் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்ட மேலும் இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கில் இதுவரை மொத்தம் 12சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றில் இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். உள்நாட்டு வருவாய்திணைக்களத்தைச் சேர்ந்த முன்னாள் ஆணையாளர் குணசிறிடிசொய்சா, பிரதி ஆணையாளர் ஆனந்த விக்கிரமசிங்க, விக்கிரமசிங்க அம்பேபிட்டிய, எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

ஜப்பானுக்குத் தப்பிச் செல்ல முயன்ற மற்றொரு நபரான மொகமட் குசைன், மொகமட் ரிஸ்வானும் கைதுசெய்யப்பட்டார். இலங்கையிலிருந்து வெளியேறி தலைமறைவாகி உள்ள சந்தேக நபர்களைக் கைதுசெய்யவும் இரகசியப் பிரிவு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு)

# ஹெய்ட்டிக்கு இராணுவம்

(கொழும்பு)

ஹெய்ட்டி நாட்டில் ஐ.நா. அமைதிப் படையில் இணைந்து செயற்படுவதற்காக புதிய படையணியை இலங்கை அரசாங் கம் அனுப்பவுள்ளது.

ஐ.நா.அமைதிப் படையின் கீழ் கடந்த 2004ஆம் ஆண்டு 1,000 இலங்கை இராணுவத்தினர் இணைந்தனர். விமானப்படை மற்றும் கடற்படையைச் சேர்ந்தோரும் சிறியளவில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். ஹெய்ட்டி உள்நாட்டு மோதலில்ஐ.நா.படையில் இணைந்திருந்த இலங்கை படையினர் பலரும் படுகாயமடைந்திருந்தனர்.

ஐ.நா.அமைதிப்படைப் பணிக்கு இராணுவத்தினரை அனுப்புவதற்கு ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினர் தொடர்ந்து கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (கு)

# இராசிபலன்

**01.04.2006**
**(பங்குனி 18, சனிக்கிழமை)**
**திருதியை முற்பகல் 11.08 மணிவரை**
**பரணி பிற்பகல் 4.45 மணிவரை**
**இராகுகாலம் 09.11-10.41மணிவரை**
**சுபநேரம் 3.11-4.41 மணிவரை**
**கார்த்திகை விரதம்**

- **மேடம்** சயனசுகம், மாதர்நட்பு, விருந்துபசாரம், நல்ல முயற்சி.
- **இடபம்** கற்பனை மிகுதி, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, அமைதிக்குறைவு.
- **மிதுனம்** சுபநிகழ்வு, சகோதரர் உதவி, தொழில நன்மை, தடைப்பட்ட காரியம் கைகூடும்.
- **கடகம்** கடின உழைப்பு, கல்வியில் ஆர்வம், எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம்.
- **சிங்கம்** புதிய திட்டமிடல், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, ரோகநிலை.
- **கன்னி** பொருள் விரயம், முழங்கால்வலி, வாகன பயம், காரிய தடங்கல்.
- **துலாம்** தேகநலன், நல்ல வரவேற்பு, புதிய பொருள் சேர்க்கை, தொழில் நன்மை.
- **விருச்சிகம்** மனமகிழ்ச்சி, முயற்சி க்கைகூடும், உற்சாகம், நோய் குணமடைதல்.
- **தனுசு** தாழ்ந்த சுபாவம், பணக்குறைவு, காரிய தாமதம், சொத்துக்களால் நன்மை.
- **மகரம்** ரோகநிலை, பணவிரயம், பெரியோர் ஒத்தாசை, புதிய விடயம்.
- **கும்பம்** எடுத்த கருமங்கள் கைகூடும், மாதர் நட்பு, உறவினர் வருகை, போசனசுகம்.
- **மீனம்** விவாதம், போசனசுகக் குறைவு, திடீர் நன்மை, பணவிரயம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# தையல் பயிற்சி ஆரம்ப விழா

நாயன்மார்க்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலை மாதர் சங்கத்தின் தையல்பயிற்சி நெறி ஆரம்ப விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு மாதர்சங்கத் தலைவி திருமதி சி.கனகரத்தினம் தலைமையில் பாரதிமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு தையல் பயிற்சி நெறியை வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பார். யாழ்.மாவட்ட சர்வோதய இணைப்பாளர் இ.சிவசுப்பிரமணியம் மகளிர் அபி விருத்தி நிறுவன பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளனர். (கு-134)

# தளபாடப் பற்றாக்குறை

தென்மராட்சிப் பிரதேசத்தில் மிகப்பெரிய பாடசாலையும் ஒரேயொரு தேசியப்பாடசாலையுமான சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தளபாடப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இதனால் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளுக்குச் சற்றும் பொருத்தமில்லாத வாங்குகளில் அமர்ந்து பெரும் சிரமத்துடன் கல்விகற்று வருகிறார்கள். அத்துடன் இக்கல்லூரியில் 6 முதல் 11வரையிலான 38வகுப்புகளில் பயில்கின்ற 1341 மாணவர்களுக்கான விஞ்ஞான ஆய்வு கூடம் செயற்பாட்டு அறை இல்லாத நிலையே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கு)

# நோயாளர் தேவைக்கு வாகனம்

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைக்காக வாகனமொன்றைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கும்படி ஆயுர்வேத வைத்தியசாலை அதிகாரிகள் யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன் மேற்படி வைத்தியசாலையில் தளபாடப் பற்றாக்குறையுள்ளதாகவும் புனரமைப்புச் செய்யப்பட்ட வெளி நோயாளர் பிரிவுக்கு மின்சார வசதி செய்யப்படாததால் வைத்தியர்கள் மற்றும் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிய வந்துள்ளது. கைதடி வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வருபவர்களின் எண்ணிக்கை தற்பொழுது அதிகரித்து வருவதாகவும் தெரிகிறது. (கு)

# வருடாந்த மஹோற்சவம்

சுன்னாகம் தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (கு)

# எரிபொருளுக்கு கிளி.யில் தட்டுப்பாடு

கிளிநொச்சி நகரிலுள்ள எரிபொருள் விற் பனை நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் தனியார் வர்த்தக நிலையங்களில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 105ரூபா முதல் 115ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால்எரிபொருள் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எரிபொருள்விற்பனை நிலையங்களில் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றன. (கு)





திண்மக் கழிவகற்றல் தொடர்பாக யாழ்.சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தில் நடைபெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குக்குத் தலைமை தாங்கிய சதீஸ்குமாரையும், அதில் கருத்துரைவழங்கிய யாழ்.மாநகர சபை பிரதேச சுற்றாடல் அதிகாரி ரி.என்.சூரியராஜ்ஜையும், மேற்படி சங்கத்தின் முன்னாள் தலைவர் எஸ்.சுப்பிரமணியத்தையும் மற்றும் பொது மக்களையும் படத்தில் காணலாம். (படங்கள்:- யாழ்.நிருபர்)

# சிங்கள ஊடகங்கள் முதலில் போர்நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும்

## க.வே.பாலகுமாரன் தெரிவிப்பு

சிங்கள, ஆங்கில ஊடகங்கள் போர் நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ வானொலியான புலிகளின் குரலில் ஒலிபரப்பாகிய அரசியல் அரங்கம் பகுதியில் அவர் ஆற்



றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைதிக்கான பேச்சுவார்த்தை தொடர்பான முயற்சிகள், தோல்விகள், பாடங்கள் என்ற வகையில் அண்மையில் ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த நூலை சிங்களத்தில் உள்ள குமார் ரூபசிங்க தொகுத்திருக்கிறார். இந்நூலில் பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன.

முக்கியமாக எரிக் சொல்ஹெய்மின் நீண்ட செவ்வி ஒன்றும் அதில் இடம்பெற்றுள்ளது. ஓரளவுக்கு மனம் திறந்து முதன் முறையாக எரிக்சொல்ஹெய்ம் அதில் பேசியிருக்கிறார். இந்தப் பேச்சுவார்த்தையின் பின்னணி, இதில் தலையிட்ட விதம், இந்தியாவுடனான தொடர்புகள், அவரது கருத்துக்கள் என பலவற்றை அவர் அதில் சொல்லியிருக்கிறார்.

அவரது கருத்துக்களை இங்கே நாங்கள் பேசுவது அக்கருத்துக்கள் எங்களுக்கு ஆதரவாக இருக்கிறது என்பதற்காகவோ அல்லது அதனை எங்கள் பரப்புரைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவோ அல்ல.

### பேச்சுக்களிலிருந்து பெறும் பாடம்

இந்த நூல் இரு பகுதிகளாக வெளிவந்திருக்கிறது இதுவரை நடந்த அத்தனை பேச்சுக்களும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. இப்போதைய பேச்சுவார்த்தை முடிவடையாத நிலையில் வெற்றியா தோல்வியா என்று கூற முடியாவிட்டாலும், கடந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியாக இருக்கின்றமையால் அதற்கூடாக பெறுகிற பாடங்கள் முக்கியமானவையாக இருக்கிறது.

இந்தியப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் இந்தியத் தலையீடு தொடர்பாகவும் 'ஹிந்து' தோமஸ் ஏபிரகாம் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். கடைசியாக அவர் அதில் சுருக்கித் தொகுத்துச் சொல்லும் செய்தி என்னவெனில் ,

'இந்தியா இரட்டைத்தட மூலோபாயத்தைப் பின்பற்றியதால் இந்தப் பேச்சுக்கள் வெற்றி தரவில்லை' என்பதுதான். விடுதலை இயக்கங்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து பயிற்சி அளித்துப் போராட விடுவது என்பது தமிழீழத்தை அடைவதற்கான இலக்கிற்காக இந்தியா செய்திருந்தால் நிச்சயமாக அது வெற்றி பெற்றிருக்கும் என்று அவர் எழுதியிருக்கிறார்.

நிச்சயமாக இது நல்ல கருத்து. தமிழீழத்தை அடைவதற்கான ஒரு வழியாக போராளி இயக்கங்களுக்கு ஆயுதத்தைக் கொடுத்து அதை அடைவதற்கு முயன்றிருந்தால் இந்தியா வென்றிருக்கும். 1999 ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சினை தொடர்பாக கதைத்திருப்பதாக எரிக் சொல்ஹெய்ம் கூறியிருக்கிறார். இனப் பிரச்சினையில் நோர்வே தலையிட்டதன் பின்னணியையும் எரிக் சொல்ஹெய்ம் கூறியிருக்கிறார்.

பனிப்போர் காலம் முடிவடைந்த 1989ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஒரு புதிய உலகத்தில் அமைதிக்கான முயற்சியில் தாங்கள் ஒரு சிறிய பங்களிப்பைச் செய்ய விரும்பி பழைய வரலாற்று மரபுக்கேற்ப தலையிட்டதாகக் கூறுகிறார் எரிக் சொல்ஹெய்ம். தொடக்கத்தில் மத்திய கிழக்கு, பலஸ்தீனிய–இஸ்ரேலிய சிக்கல், கௌத மாலா பிரச்சினைகளில் தலையிட்டதையும் அண்மைக்காலமாக இலங்கை, சூடானில் தலையிட்டதையும் விவரித்துக் கொண்டு செல்கிறார். ஈராக்கிலும், பிலிப்பைன்சிலும் கொலம்பியாவிலும் தலையிட்டதையும் கூறும் எரிக்சொல்ஹெய்ம் இலங்கை விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதாகக் கூறுகின்றார்.

அமெரிக்கா போன்ற நாடுகள் இங்கே நேரடியாகத் தலையிடுகின்ற போது அவர்களால் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குக் கூடிய அழுத்தங்களைக் கொடுத்து தீர்வுக்குச் செல்ல வைக்க முடியும் என்கிறார் எரிக் சொல்ஹெய்ம். அதற்கு உதாரணமாக பொஸ்னியாப் பிரச்சினையில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டுகிறார்.

சம்பந்தப்பட்ட இருதரப்பும் தாங்களாகவே பேச்சுக்குத் தீர்வு காண்பதற்கு சிறிய அளவில்தான் தாங்கள் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை அமெரிக்காவை உதாரணம்காட்டி எரிக்சொல்ஹெய்ம் சொல்கிறார். அதே நேரத்தில் ஈராக் போன்ற சில இடங்களில் அமெரிக்காவால் கூட இதைச் செய்ய முடியாது என்கிறார்.

பொஸ்னியா பிரச்சினையில் கொடுக்கப்பட்ட அழுத்தங்களைப் போல் சிங்களத் தரப்புக்குக் கொடுக்க முடியாது என்பதையும் எரிக் சொல்ஹெய்ம் ஒப்புக்கொள்கிறார். ஆகையால் இந்தப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களின் தலையில் விழுகிறது. அந்த வகையில் தான் தங்களுடைய தலையீட்டை இந்தியா போன்ற நாடுகள் ஏற்றுக் கொண்டதாகவும் மறைமுகமாக எரிக்சொல்ஹெய்ம் தெரிவிக்கிறார். ஆகவே இத்தகைய தலையீடுகள் கூட ஒரு எல்லைக்கு அப்பால் செல்ல முடியாது என்பதை நாம் இதிலிருந்து அறிந்துகொள் ளலாம்.

### சிங்கள ஊடகங்களின் விஷமத்தனமான பிரசாரம்

அடுத்து நோர்வேக்கு எதிரான சிங்களத்தரப்பின்–ஊடகங்களின் விசமத்தனமான பிரச்சாரத்துக்கு எரிக் சொல்ஹெய்ம் விளக்க மாகப் பதில் சொல்கிறார். ஓரளவுக்கு அரசியலில் விமர்சனங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இயல்பான விமர்சனங்களை–சட்டரீதியானவற்றை நாம் ஏற்றுக்கொள்வோம். ஆனால் இலங்கையில் விமர்சனங்கள் விசமத்தனமாக இருக்கின்றன. பத்திரிகைகளை விற்பனை செய்வதற்காக நம்ப முடியாத கதைகளை எதுவித உண்மைகளுமின்றி எழுதுகின்றனர்.

ஒரு செய்தியை எழுதுகின்ற போது தவறு ஏற்பட்டால் அதை ஏற்றுக்கொண்டு மறுநாளே திருத்தம் போடுகின்ற வழமை உலகத்திலும் குறிப்பாக இந்தியாவிலும் இருப்பதை எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் இலங்கையில் ஒருபோதும் செய்தியின் உண்மைத் தன்மை விசாரிக்கப்பட்டு எழுதப்பட்டதாக வரலாறே இல்லை என்றும் புலிகளுக்கு சிலவானொலி ஒலிபரப்புக் கருவிகளை வாங்கியது பற்றிய செய்தியை அதற்கு உதாரணமாகச் சுட்டிக்காட்டுகிறார் எரிக் சொல்ஹெய்ம்.

இந்தக் கருவிகள் சிறிலங்கா அரசாங்கத்தின் ஒப்புதலுடன் அமைதிக் காலத்தில் தொடர்பு சாதனங்களுக்காகக் கொடுக்கப்பட்ட கருவி. இது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருவி. சிறிலங்காவின் இராணுவம், கடற்படை மற்றும் பலத்தரப்பட்ட நாடுகளுக்கும் எப்படி நோர்வே இராணுவப் பயிற்சி அளித்ததோ அதேபோல் புலிகளின் தரப்புக்கும் ஆரம்ப கட்டத்தில் பகிரங்கமாகவே பயிற்சி அளித்தது என்கிறார்.


சிறி லங்காவின் ஊடகங்கள் தொடர் பாக சர்வதேச சமூகத்தில் ஒரு கருத்துவந்துள்ளமை தொடர்பில் நாம் திருப்திகொள்கிறோம். 2000 ஆம் ஆண்டுகால கருத்துருவாக்கத்தினால் இலங்கையில் அமைதிக்கான ஒரு சிறிய இடம் கூட இல்லாமல் செய்துவிட்டார்கள்.

சிங்களத்திலே என்ன நடந்தாலும் அதனைப் புலிகள் செய்தார்கள் என்று உருவாக்கி வைத்திருக்கும் காலத்தில் அமைதி எவ்வாறு உருவாகும்? என்ற கேள்விக்குச் சான்றாக எரிக் சொல்ஹெய்மின் கருத்துள்ளது. இலங்கையில் உண்மையிலேயே ஒரு போர் நிறுத்தத்தை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் செய்ய வேண்டும் என்பது எங்களது தனிப்பட்ட கருத்து. சிறிலங்கா ஊடகங்கள் தங்கள் எதிர்மறையான போக்கை மாற்றாவிட்டால், இலங்கையில் நடுநிலையாளர்களின் நிலைப்பாடு மக்களிடம் சென்றடையப் போவதில்லை.

### நோர்வே வெளியேறினால்...

நோர்வே வெளியேற வேண்டி நேர்ந்தால்–நோர்வே வெளியேறத் தீர்மானித்தால் இந்தத் தீவில் எவருமே நடுநிலையாளராகச் செயற்பட முன்வரமாட்டார்கள். நோர்வே வெளியேற்றப்பட்டால் என்ன நடக்கும்? விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறுவது போல், நடுநிலையாளர்கள் வெளியேற்றப்பட்டால் இந்தத்தீவில் அமைதிப் பேச்சுக்கானவாய்ப்பே இல்லாமல்போகும். புலிகளை அரசியல் மயப்படுத்த வேண்டும். இராணுவத் துருப்புச் சீட்டைப் பயன்படுத்தாமல் அரசியல் துருப்புச் சீட்டை அவர்கள் பயன்படுத்துவதற்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

இன்னொரு பக்கமாக, ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஒன்றாக செயற்படுவதற்கான முயற்சிகளை மேற் கொண்



டிருக்கிறோம் என்கிறார் எரிக் சொல்ஹெய்ம். அவரது வார்த்தைகளிலேயே சொல்வதானால், பண்டா–செல்வா ஒப்பந்தம் தூக்கி எறியப்பட்டது. டட்லி–செல்வா ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது. இந்த இரண்டும் சுதந்திரக் கட்சியாலும் ஐக்கிய தேசியக்கட் சியாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இவர்கள் இருவர் மீதுமே தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்.

இந்த மாதிரியான நம்பிக்கை யீனம் உள்ள போது சிறிலங்கா அரசாங்கத்தை நம்ப வைக்க வேண்டியது என்பது எங்களுடைய முக்கிய பணியாக இருக்கிறது. ஆகவே இரு கட்சிகளையும் ஒன்றுபடுத்தி சிறிலங்கா –அரசை ஒருநிலைப் படுத்தி அரசாங்கம் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதனூடாகத்தான் நாங்கள் அமைதி முயற்சிக்கான பெரிய தடையை மாற்ற முடியும் இவை நடக்கக்கூடிய காரியமா? இல்லையா? என்பதை நடைமுறையில் பார்ப்போம்.

இந்த இரண்டு கட்சிகளுமே பல்வேறு வகையில் செயற்பட்டு பதவிக்காக ஒன்று சேர்வதில் பிரியமாக இருக்கிறார்கள். தேசிய அரசாங்கமாக இல்லாவிட்டாலும் இந்த இரு கட்சிகளின் யாவும் ஒன்றாக மாறி ஒரே தலைமையின் கீழ் வரும்போது மஹிந்த ஒரு தீர்வை வைக்கமுடியுமா என்பதை பொறுத்திருந்து பார்க்க முடியும். இந்தக் காலகட்டத்தில் ஜே.வி.பி. என்ன செய்யப் போகிறது? ஜே.வி.பி.யை எப்படி கையாளப் போகிறோம் என்பது பற்றி எந்த இடத்திலும் எரிக் சொல்ஹெய்ம் பேசவில்லை. அதை தவிர்த்துக்கொண்டிருக்கிறார். அதுபற்றி நாமும் பேசவிரும்பவில்லை.

இந்தப் பேச்சுக்களில் இரட்டைத்தட அணுகுமுறை எப்படி இருக்கிறது? அண்மையில் ஒரு கட்டுரை வெளியாகி இருக்கிறது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப்பட்டம் பெற்ற தேசிய இனச்சிக்கல் ஆய்வாளர் சச்சிதானந்தம் சதாசிவம் அதை எழுதியிருந்தார். அரசாங்கம், இந்தியா, இணைத் தலைமை எல்லோருமே போர் நிறுத்த உடன்பாட்டுக்கு ஊடாக புலிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிழல் போரை சமகாலத்திலே மேற்கொள்கிறார்கள் என்று மிகக் கடுமையாக எழுதியிருக்கிறார்.

இரட்டை நிலைக்கு உதாரணமாகச் சொல்வது, துணை இராணுவக் குழுக்களைவைத்துக் கொண்டு இல்லை யென்பதும் ஆயுதத்தைக் கொடுத்துவிட்டு ஆயுதங்களை பறிக்க முடியாது என்றும் கருத்துகளைச் சொல்வதும்தான் என்கிறோம் நாங்கள்.

ஜெனீவா பேச்சுக்களில் தடையாக உள்ள காரணியை அகற்றச் சொல்லி நாங்கள் கேட்கிறோம். அது அகற்றப்படவில்லை என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அந்தக் கட்டுரையாளர் புலித் தலைவருடைய வியூகம் காரணமாக சிறிலங்காவின் முயற்சிகள் அனைத்தும் தடைப்பட்டு நிற்கின்றன. இனி அடுத்த முயற்சிகளை மேற்கொள்ளப் போகிறார்கள். என்று சதானந்தன் கேள்வி எழுப்புகிறார்.

ஆக ஒரு செய்தி துலாம்பர மாக தெரிகிறது– இரட்டைத்தட அணுகுமுறை என்பது ஒரு கட்டத்துக்கு அப்பால் பயன்படாது உண்மையான அமைதியைக் கொண்டு வர வேண்டுமானால் ஒரு தடப்பாதையைத்தான் எரிக் சொல்ஹெய்ம் பின்பற்ற வேண்டும். அந்தத் தடத்தைப் பின்பற்ற வேண்டுமானால் ஊடகத் தடைகள் நீக்கப்பட வேண்டும். இரு கட்சிகளும் ஒன்றாக இணைக்கப்படவேண்டும்.

அதற்கு அப்பால் தமிழ் மக்கள் இவர்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இந்த நீண்ட செயற்பாட்டுக்கு இரட்டைத்தட அணுகுமுறையைக் கைவிட்டு சிங்கள அரசு முன்வருமா? என்கிற கேள்வி மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டிருக்கிறது என க.வே. பாலகுமாரன் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (கு)

# மாணவர் அனுமதி தொடர்பான விஷேட பேச்சுவார்த்தை

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதி பெற தகுதிபெற்ற மாணவர்களை சேர்த்துக்கொள்வது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை யொன்று அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழகமானிய ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் துணைவேந்தர்களுக்கிடையில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பல்தேர்வு வினாத் தாள் மீள் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக பெறுபேறுகள் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த விடயம் குறித்து விசாரணை செய்ய கல்வியமைச்சர் மூன்றுபேர் கொண்ட குழுவொன்றையும் நியமித்துள்ளார். முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் பிரியாந்த பெரேரா,முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் குணபால விக்கிரமரட்ண,பேராசிரியர் வி.கே சமரநாயக்க ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஏப்ரல் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமான முறைப்பாடுகளை பொதுமக்கள் இந்தக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு கல்வியமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. (கு-9)

# இன்று ஒரு தகவல்

## புத்தகப் புழுக்கள்

"பத்து வருடத்திற்கு முன்னால் வாங்கிய திருக்குறள் புத்தகம் சார் இது. இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன்" என்று சொல்வது சரி. "பத்து வருடத்திற்கு முன்னால் வாங்கிய பத்திரிகை சார் இது. இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன் பாருங்கள்" என்று சொன்னால் அது சரியாக இருக்குமா?

படிப்பதில் சில வகை உண்டு. அதைப்பற்றி ஆங்கில அறிஞர் பேக்கன் சொல்லியிருக்கிறார். "நூல்களில் பல வகை உண்டு. அதில் சிலவற்றை ருசி பார்க்கவேண்டும். சிலவற்றை அப்படியே விழுங்கிவிடவேண்டும். சிலவற்றை சுவைத்து அப்படியே ஜீரணம் செய்துவிடவேண்டும்" என்று அவர் சொன்னார். அவர் சொன்னதன் பிரகாரம் மனிதன் நடந்து கொள்கிறானோ இல்லையோ பூச்சிகள் அவரது வார்த்தைக்கு அப்படியே மரியாதை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

எவ்வளவு பெரிய மனிதன் எழுதிய புத்தகமாக இருந்தாலும் சரி, பூச்சிகள் மிகவும் சுலபமாக அரித்துச் சாப்பிட்டுவிடும். "இந்தப் புத்தகத்தை அப்படியே கரைத்துக் குடித்திருக்கிறேன் சார்" என்று நாம் மார்தட்டிக் கொள்வது உண்டு. மார்தட்டிக் கொள்ளாமல் அதைச் செய்வது புத்தகப் புழுக்கள் தான். இந்தப் பூச்சிகளில் நிறைய வகை உண்டு.

சரி... இந்தப் பூச்சிகளிடமிருந்து புத்தகங்களைக் காப்பாற்றுவது எப்படி? புத்தகங்களை அடுக்கி வைக்கும் இடத்தில் நல்ல காற்றோட்டம் இருக்கவேண்டும். வெளிச்சம் இருக்க வேண்டும். புத்தகங்களை தரையில் அடுக்கிவைக்கக் கூடாது. சுவரில் ஒட்டினாற்போலும் வைக்கக் கூடாது. மண்ணெண்ணெய் வாசனை இருந்தால் கறையான் அருகில் நெருங்காது. அதற்கென்று சில கிருமிநாசினிகள் உண்டு. அதைத் தூவலாம் அல்லது தெளிக்கலாம்.

நூல்கள் அழிவதைத் தடுப்பதற்கு மேல்நாடுகளில் என்ன செய்கின்றனர் தெரியுமா? கிருமிநாசினியை அச்சடிக்கும் மையிலேயே கலந்துவிடுகிறார்கள் சார். நமது நாட்டில் பல நூல்களை கட்டடம் செய்ய அதாவது பைண்ட் பண்ண உபயோகிக்கும் துணியை சிவப்பு அல்லது மஞ்சல் நிறத்தில் நனைத்து எடுத்துவிடுவார்கள். நிறத்தை ஏற்றும்போது கலக்கும் பொருளில் கிருமிநாசினியின் சக்தி இருக்கிறது. அதனால் நூல்கள் சேதமடைவதில்லை.

மனிதனுக்கு வியாதி வந்தால் ஒதுக்கிவைத்துவிடுகிறோமல்லவா? அதே மாதிரி புத்தகத்துக்கு வியாதி வந்தாலும் ஒதுக்கி வைத்துவிடவேண்டியதுதான். மனிதனுக்குச் செய்வது போலவே புத்தகத்துக்கும் வைத்தியம் செய்ய வேண்டும். முதலில் நோய் பரவும் வகையைத் தடைப்படுத்த வேண்டும். அதற்குப்பின்பு நோய்க்கு சிகிச்சையளிக்கவேண்டும். இதற்கென்றே சில மருத்துவர்கள் இருக்கின்றனர். நூல் நோய் மருத்துவர்கள்.

லெனில் மாநில நூலகம் மிகவும் பெரியதாம். அதனால் தினசரி பயனடையும் வாசகர்கள் 8000 பேராம். அந்த நூலகத்தில் இருக்கும் அடுக்குகளின் நீளம் எவ்வளவு தெரியுமா? 200 மைல். ஆமாம்! அவ்வளவு பெரிய நூலகம். அதில் நூல் நோய் மருத்துவர்கள் 200 பேருக்கு மேல் இருக்கிறார்களாம். பொலிவும், வலுவும் இழந்து நலிந்து போன புத்தகங்களுக்கு ஊட்டமும் சிகிச்சையும் கொடுத்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதுதான் அவர்களுக்கு வேலையாம்.

இன்னொரு விஷயம் தெரியுமா உங்களுக்கு? புத்தகங்கள் மூலமாகக் கூட வியாதிகள் பரவும். நூல்கள் மூலமாக அம்மை, குளிர்ச்சுரம் போன்ற நோய்கள் பரவுவதை அவர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். சிலசமயம் அந்த நோய் பீடித்தவர்கள் வீட்டிலிருக்கும் புத்தகங்களைக் கொழுத்திவிடுவதும் உண்டாம். இத்தாலியில் ஒரு சோதனை நடத்தினார்களாம். எலும்புருக்கி நோய்- புத்தகங்கள் மூலமாகப் பரவுவதில்லை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஆக, புத்தகத்தைப் படித்து விஷயம் தெரிந்துகொள்வது ஒரு பக்கமிருந்தாலும் படிக்காமலே அதைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய விடயமும் நிறைய இருக்கிறது. இன்னொரு முக்கியமான விடயமும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது புத்தகத்தை ஒருவரிடம் கடன் கொடுத்தால் அதை அவரிடமிருந்து திருப்பி வாங்குவது எப்படி? இது மிகவும் முக்கியம்.

ஒருவர் இருந்தார். மிகவும் கறார் பேர்வழி. அவரது வீட்டில் ஒரு நூல் நிலையம் வைத்திருந்தார். எல்லாப் புத்தகமும் இருந்தது. பக்கத்து வீட்டுக்காரர் வ்ந்து... "சார்! ஒரு நாவல் கொடுங்கள்! எடுத்துக் கொண்டுபோய் படித்துவிட்டுத் திருப்பிக் கொண்டுவந்து த்ருகிறேன்" என்று கேட்டார். அதற்கு இவர் "உங்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போக வேண்டாம். இங்கேயே வாருங்கள்... இங்கேயே உட்கார்ந்து படியுங்கள். படித்ததும் புத்தகத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டுப் போங்கள் அதுதான் நல்லது" என்றார். சரி என்று அப்படியே செய்தார் அவர்.

கொஞ்சநாள் கழித்து...இவர் அவர் வீட்டுக்குப் போனார் "ஒட்டடை குச்சி இருந்தால் கொஞ்சநேரம் இரவல் கொடுங்கள்" என்றார். இதற்கு அவர் "உங்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போகவேண்டாம். இங்கேயே ஒட்டடை அடியுங்கள். வேலை முடிந்ததும் கொடுத்துவிட்டுப் போங்கள். அதுதான் நல்லது" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எம்மீது வலிந்து தாக்குதல் நடத்தப்பட்டால் பதில் தாக்குதல் நடத்துவோம் - எழிலன்

(திருகோணமலை)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட தலைவர் உவே ஜோனுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசில் துறைப் பொறுப் பாளர் சி.எழிலனுக்கும் இடையிலான சந்தப்பு ஒன்று நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.





இச்சந்திப்பின் போது கடற்படையினரின் கரையோரம் மற்றும் மீனவர்கள் மீதான தாக்குதல்கள் பற்றி திருமலை கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரியப்படுத்தியதுடன் முறைப்பாட்டினையும் செய் துள்ளார். இதன்போது கடற்படையிரும் தங்கள் மீது கடற் புலிகள் வலிந்து தாக்கியதாக முறையிட்டுள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித் தனர்.

இதற்குப் பதிலளித்த திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், எமதீ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கடற்றொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு வேட்டுக்களை தீர்த்தவண்ணம் வந்த கடற்படையினர் தொடர்ந்தும் தாக்குதல்களை எமது பிரதேசங்கள் நோக்கியும் நடத்தினர். இவர்களால் ஏவப்பட்ட மோட்டார் குண்டு ஒன்றும் அரசியல்துறை அலுவலகத்தில் விழுந்துள்ளது. இவ்வாறு தாக்குதல்களை நடத்திய வண்ணம் கடற்படையினர் எமது பிரதேசத்திற்கு அண்மையாக வந்தபோதே எமது போராளிகள் பதில் தாக்குலை நடத்தி அவர்களை விரட்டியடித்துள்ளனர்.

இனிவரும்காலங்களில்எமதுமக்கள்மீதோ, அல்லது எமது போராளிகள் மேலோ வலிந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டால் நாம் இனியும் கைகட்டி பார்த்திருக்க முடியாது. எம்மீது வலிந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டால் உடனுக்குடன் பதில் தாக்குதல்களை எமதுபோராளிகள் நடத் துவர் எனவும் தெரிவித்துள்ளார். திருமலை கண்காணிப்புக் குழுத் தலைவர் சம்பூரில் கடற்படையினர் தாக்குதல் நடத்திய இடங்களையும் பார்வையிட்டுள்ளார். (கு)

## சைவபரிபாலன சபை நடாத்திய
# சைவநெறித் தேர்வில் சித்திபெற்றோர் விபரம்

சைவ பரிபாலன சபை பாடசாலை மாணவர்களுக்கிடையே கடந்த வருடம் நடத்திய சைவநெறித் தேர்வில் சித்திபெற்றோரது விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**தரம்-2**

1ஆம் இடம்:-மதனிகா விஜயதாசன் -யா/ கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

2ஆம் இடம்:-அமிர்தலிங்கம் திருக்குமரன்-யா/ மானிப்பாய் சத்தியசாயி வித்தியாலயம்

3ஆம் இடம்:-வர்சிகா சின்னத்துரை-யா/ அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலை

**தரம்-3**

1ஆம் இடம்:-புவித்தா சூரியமூர்த்தி-யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை

2ஆம் இடம்:-இராகவி இராகவன்:-யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

3ஆம் இடம்:-அற்புதராசா அஜந்தநாத்-யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**தரம்-4**

1ஆம் இடம்:-பாலாஜினி பாலசிங்கம்-யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்

2ஆம் இடம்:-சாம்பவி இராஜேஸ்வரன்- யா/ கரணவாய் வேதராணியெஸ்வர வித்தியாலயம்

3ஆம் இடம்:-அபர்ணா கணேசக்குருக்கள்- யா/ வட்டு மத்திய கல்லூரி

**தரம்-5**

1ஆம் இடம்:-வஜீனா செல்வரஞ்சன்-யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

2ஆம் இடம்:-தனுஜா செல்வம் -யா/கோட்டைக்காடு அ.த.க.பாடசாலை

3ஆம் இடம்:-சகிஷ்மனா சிவசந்திரபோஸ்-யா/ வதிரி திருஇருதயக் கல்லூரி

**தரம்-6**

1ஆம் இடம்:-மிதுலாஜினி விவேகானந்தன் -யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

2ஆம்இடம்:-யசிந்தா கந்தசாமி-யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

3ஆம் இடம்:-சுஜீபா சந்திரபோஸ்- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

**தரம்-7**

1ஆம் இடம்:-திலக்ஷி பூர்ணலிங்கம்-யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

2ஆம் இடம்:-றொஜினா சகாதேவன்-யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

3ஆம் இடம்:-சக்திவேல் திவிஜன்- யா/யாழ். இந்துக் கல்லூரி

**தரம்-8**

1ஆம் இடம்:-தனுஷா பஞ்சலிங்கம்-யா/கைதடி நாவற்குழி அ.த.க.ப்பாடசாலை

2ஆம் இடம்:-தமிழினி சுகுமார்-மு/குமுழமுனை மகா வித்தியாலயம்

3ஆம் இடம்:-பபினா தவபாலன்-யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

**தரம்-9**

1ஆம் இடம்:-அன்னலிங்கம் சசிந்தன்-யா/சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயம்

2ஆம் இடம்:-பாலகோபாலன் கோகுலன்-யா/ ஹாட்லிக் கல்லூரி

3ஆம் இடம்:-தியாகராஜா அஜந்தன்-யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்

**தரம்-10**

1ஆம் இடம்:-சித்திரவேல் சஞ்ஜெய் - யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

2ஆம் இடம்:-மதுரா பாலசுப்பிரமணியம்-யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

3ஆம் இடம்:-கஜந்தி நடராஜா- மு/விசுவமடு மகா வித்தியாலயம்

**தரம்-11**

1ஆம் இடம்:-பவித்திரா இராசரத்தினம்-யா/ புற்றளை மகாவித்தியாலயம்

2ஆம் இடம்:-தவராசா இளங்கோ-மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

3ஆம் இடம்:-சாகினி நடராசா-யா/ இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்

**இந்துநாகரிகம் தரம்-12**

1ஆம் இடம்:-உதயதர்சினி முத்துராசா- வ/ சைவப்பிரகாச மகளிர் கல்லூரி

2ஆம் இடம்:-கிருஷாந்தி குருமூர்த்தி-யா/ விக்ரோறியாக் கல்லூரி

3ஆம் இடம்:-சிவஞானம் ஞானகணேசன்-யா/ வேலாயுதம் மகா வித்தியாலயம்

**இந்துசமயம் தரம் -12**

1ஆம் இடம்:-கீதரோகிணி தங்கராசா-கிளி/ இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

2ஆம் இடம்:-கோமதர்சினி பரமேஸ்வரர் -யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

3ஆம் இடம்:-அஜித்தா தங்கராஜா -யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

**இந்துநாகரிகம் தரம்-13**

1ஆம் இடம்:-அனோஜா முருகையா-யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

2ஆம் இடம்:-சசிகலா சிவராசா-யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்

3ஆம் இடம்:-சிவப்பிரியா துரைத்தம்பி- யா/ அருணோதயாக் கல்லூரி

**இந்துசமயம் தரம்-13**

1ஆம் இடம்:-அழகர்சாமி நந்தகுமார்-க/வ/ அபிராமி தமிழ் மகாவித்தியாலயம் (கண்டி)

2ஆம் இடம்:-நிருபா வேந்தன்-மு/மல்லாவி மத்திய கல்லூரி

3ஆம் இடம்:-றெமீனா பாலச்சந்திரன்-யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

முதலாம் இடம்பெற்றவர்களுக்கு தங்கப் பதக்கமும் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் வழங்கப்படும்.

இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும். (கு)

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்

கிடைக்கப் பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு,

## அம்பாந்தோட்டை மாவட்டம்

### தங்காலைப் பிரதேச சபை 14,940

| கட்சி | வாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.க | 7210 | 03 |
| ம.வி.மு | 4440 | 02 |

### அம்பாந்தோட்டை நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 2325 | 06 |
| ஐ.தே.க | 1930 | 03 |
| ம.வி.மு | 199 | - |

## ஹம்பகா மாவட்டம்

### மினுவாங்கொட நகரசபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 2231 | 06 |
| ஐ.ம.சு.கூ | 1799 | 04 |
| ம.வி.மு | 320 | 01 |

### மகர பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 31128 | 11 |
| ஐ.தே.க | 25630 | 07 |
| ம.வி.மு | 14019 | 04 |
| ஜா.ஹெ.உ | 1540 | 01 |

### கட்டானைப் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 34153 | 14 |
| ஐ.தே.க | 17955 | 06 |
| ம.வி.மு | 4877 | 02 |

### நீர்கொழும்பு மாநகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 27908 | 14 |
| ஐ.தே.க | 26738 | 11 |
| ம.வி.மு | 2368 | 01 |

### நீர்கொழும்பு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 28242 | 13 |
| ஐ.தே.க | 20090 | 07 |
| ம.வி.மு | 4651 | 02 |

### மகர பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 31128 | 11 |
| ஐ.தே.க | 25630 | 07 |
| ம.வி.மு | 14019 | 04 |
| ஜா.ஹெ.உ | 1540 | 01 |

### பாலியகொட நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 5121 | 05 |
| ஐ.ம.சு.கூ | 4567 | 03 |
| ம.வி.மு | 990 | 01 |

## மாத்தளை மாவட்டம்

### அம்பங்கங்கை கொறளை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 4207 | 06 |
| ஐ.தே.க | 2831 | 03 |
| ம.வி.மு | 433 | - |

### லக்கல பல்லேகம பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 4106 | 07 |
| ஐ.தே.க | 1607 | 02 |
| ம.வி.மு | 520 | - |

### மாநகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 8843 | 08 |
| ஐ.தே.க | 4386 | 03 |
| ஜா.ச.பெ | 1200 | 01 |
| ம.வி.மு | 994 | 01 |

### பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 6902 | 09 |
| ஐ.தே.க | 6286 | 07 |
| ம.வி.மு | 1173 | 01 |
| ஜா.ஹெ.உ | 496 | 01 |

### யில்கமுவ பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 8207 | 07 |
| ஐ.தே.க | 2879 | 01 |
| ம.வி.மு | 1225 | 01 |

### வெலிகந்த பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 5869 | 06 |
| ஐ.தே.க | 4113 | 02 |
| ம.வி.மு | 1298 | 01 |

## மாத்தறை மாவட்டம்

### அக்குரஸ்ஸ பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 9830 | 06 |
| ஐ.தே.க | 7736 | 03 |
| ம.வி.மு | 6665 | 03 |

### தெவினுவர பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 8159 | 06 |
| ஐ.தே.க | 6863 | 03 |
| ம.வி.மு | 4347 | 02 |

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 27676 | 11 |
| ஐ.தே.க | 23802 | 08 |
| ம.வி.மு | 5638 | 02 |
| சுயே.குழு | 1496 | 01 |

### வெலிகம பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 25847 | 14 |
| ஐ.தே.க | 11631 | 05 |
| ம.வி.மு | 4468 | 02 |
| ஜா.ஹெ.உ | 1050 | 01 |

### கொட்டக் ஹொட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 12654 | 08 |
| ஐ.தே.க | 6630 | 03 |
| ம.வி.மு | 2792 | 01 |

### ஹமருப்பிட்டிய பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 12188 | 06 |
| ஐ.தே.க | 5172 | 02 |
| ம.வி.மு | 1928 | 01 |

### திஹகொட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 8705 | 06 |
| ஐ.தே.க | 5834 | 02 |
| ம.வி.மு | 2112 | 01 |

## அம்பாறை மாவட்டம்

### லக்கல பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 2584 | 07 |
| ஐ.தே.க | 1734 | 04 |
| ம.வி.மு | 120 | - |

### திருக்கோவில் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| தமிழரசு | 8318 | 09 |
| ஈ.பி.டி.பி | 129 | - |
| சுயேட்சை | 16 | - |

### நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 4230 | 08 |
| ஐ.தே.க | 3208 | 05 |
| ம.வி.மு | 1839 | 01 |

### யஹுன பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 7447 | 06 |
| ஐ.தே.க | 5122 | 02 |
| ம.வி.மு | 1436 | 01 |

### ஹரிதலாலப் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 3754 | 06 |
| ஐ.தே.க | 2113 | 03 |
| ம.வி.மு | 1522 | 02 |

## இரத்தினபுரி மாவட்டம்

### பலாங்கொட நகரசபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 5870 | 07 |
| ஐ.தே.க | 2454 | 02 |
| ம.வி.மு | 328 | - |

### நெந்திகட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 24370 | 09 |
| ஐ.தே.க | 10147 | 03 |
| ம.வி.மு | 2700 | 01 |

### பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 15165 | 13 |
| ஐ.தே.க | 9381 | 07 |
| ம.வி.மு | 1744 | 01 |
| இ.தொ.கா | 1456 | 01 |

### கல்பதுல பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 20620 | 12 |
| ஐ.தே.க | 13130 | 06 |
| ம.வி.மு | 1332 | 01 |

### ககவத்த பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 9746 | 06 |
| ஐ.தே.க | 5289 | 03 |
| ம.வி.மு | 645 | - |

### கொடகொல

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 16782 | 09 |
| ஐ.தே.க | 10502 | 05 |
| ம.வி.மு | 1397 | - |

### எம்பிலிப்பிட்டி நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 5545 | 04 |
| ஐ.தே.க | 5011 | 02 |
| ம.வி.மு | 4085 | 01 |

### காலி நெலுவ

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 9146 | 07 |
| ஐ.தே.க | 2520 | 01 |
| ம.வி.மு | 1390 | 01 |

### எம்பிலிப்பிட்டிய பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 16744 | 08 |
| ஐ.தே.க | 11948 | 04 |
| ம.வி.மு | 6858 | 02 |

### பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 15165 | 13 |
| ஐ.தே.க | 9381 | 07 |
| ம.வி.மு | 1744 | 01 |
| இ.தொ.கா | 1456 | 01 |

### ஹெலகலியகொட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 17010 | 06 |
| ஐ.தே.க | 9142 | 04 |
| ம.வி.மு | 2420 | 01 |
| ஐ.சோ.க | 910 | - |

## கொழும்பு மாவட்டம்

### ஜயவர்த்தனபுரகோட்டே

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 19829 | 11 |
| ஐ.தே.க | 14721 | 06 |
| ம.வி.மு | 4933 | 02 |
| ஜா.ஹெ. உ | 1214 | - |

## அநுராதபுர மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 10058 | 07 |
| ஐ.தே.க | 4765 | 02 |

### கிழக்கு பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 7806 | 05 |
| ஐ.தே.க | 5954 | 03 |
| ம.வி.மு | 5776 | 02 |

### கொறவப் பொத்தானை பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 8076 | 07 |
| ஐ.தே.க | 4809 | 03 |
| ம.வி.மு | 1483 | 01 |

### தலாவத்தை பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 19491 | 10 |
| ஐ.தே.க | 12868 | 06 |
| ம.வி.மு | 4603 | 02 |

### பலகலப் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 8306 | 06 |
| ஐ.தே.க | 4687 | 02 |
| ம.வி.மு | 1570 | 01 |

### மதவாச்சிபுர பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 10023 | 06 |
| ஐ.தே.க | 5919 | 02 |
| ம.வி.மு | 1876 | 01 |

## மொனறாகலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 13319 | 10 |
| ஐ.தே.க | 7424 | 04 |
| ம.வி.மு | 5126 | 03 |

## களுத்துறை மாவட்டம்

### பேருவளை நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 8149 | 06 |
| ஐ.ம.சு.கூ | 5866 | 03 |
| ம.வி.மு | 604 | - |
| ஜா.ஹெ.உ | 339 | - |

### புளத்சிங்கள பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 14198 | 07 |
| ஐ.தே.க | 8553 | 03 |
| ம.வி.மு | 2786 | 01 |
| சுயே.குழு | 826 | 01 |

### மஹராவல பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 8026 | 05 |
| ஐ.தே.க | 5764 | 02 |
| ம.வி.மு | 1701 | 01 |

### நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 7572 | 06 |
| ஐ.ம.சு.கூ | 6451 | 04 |
| ம.வி.மு | 1739 | 01 |

### பாணந்துறை நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 6101 | 05 |
| ஐ.ம.சு.கூ | 5062 | 02 |
| ம.வி.மு | 3204 | 02 |

### பாயங்கர பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 9904 | 08 |
| ஐ.ம.சு.கூ | 7807 | 04 |
| ம.வி.மு | 3374 | 02 |

## கேகாலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 17787 | 12 |
| ஐ.தே.க | 10066 | 05 |
| ம.வி.மு | 3145 | 02 |

### கேகாலை நகரசபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 3830 | 06 |
| ஐ.தே.க | 2597 | 03 |
| ம.வி.மு | 1352 | - |
| ஜா.ஹெ.உ | 199 | - |

### பிளக்கொமினிய பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 11081 | 06 |
| ஐ.தே.க | 7279 | 03 |
| ம.வி.மு | 1533 | 01 |

### தரணியகெல பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 6893 | 06 |
| ஐ.தே.க | 6642 | 04 |
| ம.வி.மு | 2214 | 01 |

### எட்டியாந்தோட்ட

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 13531 | 09 |
| ஐ.தே.க | 9382 | 05 |
| ம.வி.மு | 1680 | 01 |

## நுவரெலிய ஹற்றன் மாவட்டம்

### டிக்கோய நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 2700 | 05 |
| ஐ.தே.க | 2578 | 03 |
| ம.வி.மு | 390 | 01 |

## பொலநறுவை மாவட்டம்

### மெதிரிங்க பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 15702 | 10 |
| ஐ.தே.க | 9955 | 05 |
| ம.வி.மு | 2809 | 02 |

### தமன்கடுவ பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 19263 | 09 |
| ஐ.தே.க | 10732 | 04 |
| ம.வி.மு | 3462 | 01 |

### ஹிந்துரகெட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 13478 | 10 |
| ஐ.தே.க | 6956 | 04 |
| ம.வி.மு | 6380 | 04 |

## பதுளை மாவட்டம்

### பண்டாரவளை பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 11483 | 06 |
| ஐ.தே.க | 8876 | 03 |
| ம.வி.மு | 1908 | 01 |

### அல்லற் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 9453 | 06 |
| ஐ.தே.க | 5798 | 03 |
| இ.தொ.கா | 1356 | 01 |

### ஹப்புதலை நகர சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 1527 | 07 |
| ஐ.தே.க | 4441 | 02 |
| ம.வி.மு | - | - |

### வெலிமட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 17948 | 10 |
| ஐ.ம.சு.மு | 15212 | 07 |
| ம.வி.மு | 5735 | 03 |
| ம.ம.மு | 1591 | 01 |

### ரிதி மலையட்ட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.தே.க | 7829 | 05 |
| ஐ.ம.சு.கூ | 7360 | 03 |
| ம.வி.மு | 3483 | 02 |

### பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 7454 | 06 |
| ஐ.தே.க | 4618 | 02 |
| ம.வி.மு | 1325 | 01 |

### சொர்ண ஹொட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 5787 | 06 |
| ஐ.தே.க | 2364 | 02 |
| ம.ம.மு | 1107 | 01 |

## திருகோணமலை மாவட்டம்

### நகர சபை

| | | |
|---|---|---|
| இ.த.க | 16368 | 10 |
| சுயே குழு | 4286 | 02 |

### நுவவலங்கொட பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 2120 | 06 |
| ஐ.தே.க | 1216 | 02 |
| ம.வி.மு | 223 | 01 |

### தம்பலகாமம் பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 4463 | 05 |
| ஐ.தே.க | 3474 | 02 |
| ம.வி.மு | 3351 | 02 |

### ஸ்ரீபுர பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 2603 | 05 |
| ஐ.தே.க | 2132 | 03 |
| ம.வி.மு | 1005 | 01 |


### வெலிகம பிரதேச சபை

| | | |
|---|---|---|
| ஐ.ம.சு.கூ | 19686 | 19 |
| ஐ.தே.க | 9863 | 05 |
| ம.வி.மு | 3867 | 02 |

# நிறங்களைப் பார்த்து மயங்கி விடாதீர்கள்!

நிறமுள்ள அழகான பழவகைகளைப் பார்க்கும்போது பலருக்கும் அதை வாங்கி சுவைக்கத்தோன்றும். ஆனால் உங்களை ஈர்க்கும் அந்த நிறங்கள் பல நேரங்களிலும் இயற்கையாக இருப்பதில்லை. இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்திப் பழங்களுக்கு செயற்கையாக நிறம் கொடுக்கிறார்கள். அதனை வாங்கி சாப்பிடுகிறவர்கள் பல்வேறு உடல் உபாதைகளுக்கு உள்ளாகுகிறார்கள்.

நிறங்கள் மட்டுமின்றி பழங்களைப் பெரிதாக்கவும் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பிஞ்சியிலே பழுக்கவைக்கவும், பழங்கள் கெட்டுப்போவதைத் தடுக்கவும் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.



பழங்கள் இயற்கையாக பழுப்பதற்கு எத்திலின் என்ற இயற்கையான ஹோர்மோன் காரணமாக இருக்கிறது. ஆனால் வியாபாரிகள் சிலர் இயற்கையாக பழங்களைப் பழுக்க விடுவதில்லை. செயற்கையாக அவர்கள் பழங்களைப் பழுக்கவைக்க கல்சியம் கார்பைட்டைத் தண்ணீரில் கலக்கி அசிட்டிலின் உருவாக்கி பழங்களில் பயன்படுத்துகிறார்கள். இயற்கையான எத்திலினிலும், செயற்கையான அசிட்டிலினிலும் ஒரு சில இரசாயன ஒற்றுமைகள் இருப்பதால் இந்தச் செயல்முறையில் வியாபாரிகள் இறங்குகிறார்கள். பலரும் இந்தச் செயலில் இறங்குவதற்குக் காரணம் கல்சியம் கார்பைட்டின் விலை மிகவும் குறைவு.

கல்சியம் கார்பைட்டில் ஆர்செனிக் பொஸ்பரஸ் போன்ற இரசாயனங்கள் உள்ளன. இவை சேர்ந்த பழங்களைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், இரைப்பையில் நோய்கள் ஏற்படுவது மட்டுமின்றி சுவாசப் பகுதியிலும் நோய்கள் தோன்றும். தலை சுற்றல், வாந்தி, வயிற்றுப்போக்கு, நெஞ்சில் எரிச்சல், உணவை விழுங்கும்போது வலி போன்ற பல தொந்தரவுகள் ஏற்படும்.

செயற்கை முறையில் பழுக்கவைக்கப்படும் பழங்களையும் பூச்சிக்கொல்லி மருந்து அதிகமாகப் பயன்படுத்தப்படும் மரங்களில் பழுத்த பழங்களையும் அதிகளவில் தொடர்ச்சியாகச் சாப்பிட்டால் கூடுதலான அளவு விஷத்தன்மை உடலில் போய்ச்சேரும். அதனால் நரம்பு, ஈரல், கிட்னி, ஜீரண கட்டமைப்புக்கள் பெரும்பாதிப்புகளுக்கு உள்ளாகுகின்றன. பூச்சிக்கொல்லி மருந்தில் இருக்கும் விஷம் புற்றுநோய்க்கும் காரணமாகி விடுகிறது. பழவகைகளில் இரசாயனத்தன்மை இருப்பதைக் கண்டறிவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் திராட்சைப் பழங்களில் வெள்ளைப் புள்ளிகள் போல் இருப்பதைப் பார்த்தால் அதை வாங்குவதை தவிர்த்திடுங்கள்.

பூச்சிக்கொல்லி மருந்து பழங்களில் இருப்பதைக் கழுவி முழுமையாக வெளியேற்றிவிட முடியாது என்றாலும் கழுவிச் சாப்பிடுவதே சிறந்தது. தண்ணீரில் கழுவுவதைவிட லேசான சுடுநீரில் மஞ்சள் பொடியும், உப்பும் கலந்து கழுவவேண்டும்.

# மகளிர் உலகம்



## படுக்கச் செல்லும்போது...



சாப்பிட்ட உடன் படுக்காதீர்கள். குறைந்தது இரண்டுமணி நேரம் கழித்துப் படுக்கச் செல்லுங்கள். படுக்கையின் தலைப் பகுதியை அரை அடியிலிருந்து ஒரு அடி வரை உயர்த்திக்கொள்வது நல்லது. இதற்காக நான்கு தலையணைகளை அடுக்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை. தலைப்பக்க கட்டில் கால்களுக்குக்கீழே ஒரு அடி உயரத்திற்கு மரக்கட்டைகளை வைத்தால் போதும். வலது புறமாகப் படுப்பதை விட இடதுபுறமாகத் திரும்பிப்படுப்பது நெஞ்சு எரிச்சலைக் குறைக்கும்.

சாப்பிட்டவுடன் குனிந்து வேலை செய்யக்கூடாது கனமான பொருளைத் தூக்கக் கூடாது. உடற்பயிற்சி செய்யக்கூடாது. தாண்டக் கூடாது.

## சமைத்துச் சுவைப்போம்

### புரூட் கஸ்டார்ட் ஐஸ்கிறீம்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| முட்டை | - 1 |
| பால் | - 1/2 போத்தல் |
| சர்க்கரை | - 150 கிராம் |
| வெண்ணெய் | - 3 மேசைக்கரண்டி |
| உப்பு | - சிறிதளவு |
| அப்பிள் துருவல் | - 1 கப் |



*செய்முறை:–*

முட்டையைப் பொங்கி வரும்வரை அடிக்க வேண்டும். பிறகு காய்ச்சிய பால், முட்டை, சர்க்கரை, வெண்ணெய் ஆகியவற்றை உப்பு சேர்த்துக் கட்டிப்பதம் வரும்வரை மிதமான நெருப்பில் வைத்துத் தொடர்ந்து கிளற வேண்டும். ஆனால் கொதிக்க விடக்கூடாது. ஏனென்றால் கலவை கொதித்தால் திரைந்து விடும். கலவையைக் கீழே இறக்கி நன்றாகக் குளிர்ந்த பிறகு அப்பிள் பழ விழுதைக் கலந்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்து கட்டியானதும் எடுத்துச் சுவைக்கலாம்.

## வீட்டுக் குறிப்புகள்

◆ வீட்டுச் சுவரில் விரிசலா? சீமெந்துடன் சிறிதளவு பேக்கிங் சோடா கலந்து கரை கூலாக்கி கொள்ளுங்கள். அதை விரிசலில் ஊற்றுங்கள். அவ்வளவுதான் விரிசல் ஒட்டிக் கொள்ளும்.

◆ பெயின்ட் வாசனை சிலருக்குப் பிடிக்காது. அந்த அறையில் ஒரு வெங்காயத்தை வைத்துவிட்டால் பெயின்ட் வாசனை குறையும்.

◆ ஆணி அடிப்பதற்கு முன் அந்த இடத்தில் செலோடேப்பை ஒட்டிவிட்டு ஆணி அடித்தால் சுண்ணாம்பு பெயர்ந்து வராது.

◆ வீட்டைச் சுற்றி சாக்கடை இருக்கிறதா? மாதம் இரு முறை கொஞ்சம் மண்ணெண்ணெய்யைச் சாக்கடையில் ஊற்றுங்கள். கரப்பான் பூச்சிகள் வராது.

◆ குப்பைக் கூடையில் ஒரு பொலித்தீன் உறையைப் போட்டு. அதில் குப்பையைக் கொட்டுங்கள். நாற்றம் அடிக்காமல் இருக்கும் அதோடு கூடையை வாரம் ஒரு முறை சுத்தம் செய்தால் போதும்.


◆ வீட்டைச் சுற்றித் துளசி, தும்பை செடிகளை வளருங்கள். பாம்பு மற்றும் விஷப் பூச்சிகள் வராது.

**உள்ளத்தில் நல்ல எண்ணங்கொண்ட பெண்ணின் முகம் பிரகாசமாக இருக்கும்.**

◆ ◆ ◆

**மலருக்கு நிறமும் மணமும் எவ்வளவு முக்கியமோ பெண்ணுக்கு குணமும், தோற்றமும் அவ்வளவு முக்கியம்.**

# வளரும் வயதில் பட்டினியா? வேண்டாம் மாணவிகளே!



இன்றைய மாணவிகள் சாப்பாட்டில் அக்கறை காட்டுவதில்லை. ஏனோ தானோ வென்று சிறிதளவு உணவைக் கொறித்துவிட்டுப் படிக்கச் செல்கின்றனர்.

உடலை 'ஸ்லிம்' ஆக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில், இப்படித் தங்களைத் தாங்களே பட்டினிப் போட்டுக் கொள்கின்றனர் மாணவிகள்.

மகப்பேறு, மெனோபாஸ் என்று நிறைய உடலியல் மாற்றங்களைச் சந்திக்க வேண்டிய பெண்கள் இப்படி கால் வயிறு கூட நிரம்பாமல் கிடப்பது ஆபத்து என்று மருத்துவர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர்.

கல்வி கற்பது எதற்காக? அறிவுத் திறன் வளர்வதற்காக. எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டுமானால் அறிவுத் திறனைப் பயன்படுத்தியாக வேண்டுமே?

மற்றவர்களைப் பார்த்து நாமும் இப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கிறோமா? ஒல்லியாக இருக்க வே·ண்டும் என்று மருத்துவரிடம் ஆலோசனை கேட்டோமா? நாமாகவே முடிவு செய்த உணவுக் கட்டுப்பாடா இது?


ஒரு பிடி சாப்பாடும் ஒரு மணி நேர உடல்பயிற்சியும் உங்களை ஒல்லியாகவே இருக்க விடாது. மாறாக, நாளாவட்டத்தில் பல உடல் உபாதைகளுக்கு ஆளாகி விடுவீர்கள்.

எடையைக் குறைத்து ஆரோக்கியத்தைப் பராமரிப்பதாக நினைத்துக்கொண்டால் அது தவறு. சரிவிகித உணவு முறையே உங்களுக்குச் சிறந்தது. இதனால் நீங்கள் அடையப் போகும் இலாபம் என்ன? பளபளப்பான சருமம், தலைமுடி நன்கு வளர்தல், சிரித்த முகம், தீர்க்கமாகச் சந்திக்கும் திறன் ஆகியவை.

நீங்களே உங்கள் 'மெனு'வைத் தயாரிக்கும் வழிகளை ஆராய்ந்து கொண்டால், உங்கள் வளர்ச்சி நன்றாக இருக்கும்.

☞ உருளைக்கிழங்கு, கிரீம் நிறைந்த கேக், பிட்சா மட்டுமே உள்ளே தள்ளுவதை நிறுத்தி, அனைத்து வகையான பச்சைக்காய்கறி, கீரை வகைகளைச் சாப்பிட வேண்டும்.

☞ நீங்கள் சாப்பிடும் உணவுகளைப் பட்டியலிடுங்கள். ஒரு கிளாஸ் தண்ணீர் குடித்தால் கூட கணக்கெழுதுங்கள்.



☞ உணவைக் குறைத்தால், எல்லார் மீதும் கோபம் பெருக்கெடுக்கும். நீங்கள் இருக்கும் இடமே எப்போதும் 'காச்மூச்' சுடன் நிறைந்திருக்கும்.

☞ உங்களுக்குப் பிடித்தமான பொழுது போக்குக்குத் தினமும் ஒரு மணி நேரம் ஒதுக்கினால் புத்துணர்வு கிடைக்கும் மூளைக்கு வேலை கொடுத்ததால் ஏற்படும் அசதியில் அம்மா கையால் சமைத்த உணவை உங்களை அறியாமலேயே சாப்பிட்டு விடுவீர்கள்.

☞ பட்டினிப் போட்டு உடலை வருத்திக் கொள்வதைப் போன்ற முட்டாள் தனம் உலகில் இல்லை என்று சொல்லலாம். உங்கள் உடல் மீது உண்மையிலேயே அக்கறை இருந்தால், கனவு உலகில் இருந்து கீழே இறங்கி நினைவு உலகான உண்மை நிலவரத்தைப் புரிந்துகொண்டு செயல்படுவது அவசியம். வயிற்றைக் காயப்போட்டால் தீங்கு விளைவிக்கும் அமிலங்கள் உடலில் சுரந்து வெகு சீக்கிரமே வேண்டாத பிரச்சினைகளை விலைக்கு வாங்க நேரிடும்.

# மருந்தாளர் சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

மருந்தாளர் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இச்சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் மருந்துச் சாலைகளில் பயிற்றப்பட்ட மருந்தாளர்களைக் கடமைக்கு அமர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத்துறை அமைச்சர் நிமல்சிறிபாலடிசில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க மருந்தாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 பேருக்கு பயிற்சிக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் வைபவத்திலே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மஹிந்த சிந்தனையின் கீழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவது அரசின் கடமையாகும்.

அந்த வகையில் அரசாங்க துணை மருந்துவ சேவையில் சுமார் ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த மூன்று மாதகாலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

மருந்தாளர்களாக 200 பேரை பயிற்றுவிப்பதற்கென இப்போது நியமனக் கடிதங்கள் வழங்கப்படுகின்றன.

மேலும் 200 பேர் இவ்வருட முடிவுக்குள் இப்பயிற்சிக்கென சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அதேநேரம் எதிர்வரும் நவம்பர் மாதமளவில் 260 மருந்தாளர்கள் பயிற்சியை முடித்துக்கொள்வர். இவர்கள் அரசாங்க வைத்திய சாலைகளில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

எவ்வாறிருந்த போதிலும் அடுத்துவரும் 18 மாதங்களில் நாட்டில் நிலவும் பயிற்றப்பட்ட மருந்தாளர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணப்படும்.

அதேநேரம் க.பொ.த உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியெய்தியுள்ள மேலும் 5 ஆயிரம் பேரை அரசாங்க தாதியர் சேவையில் சேர்த்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்.

மருந்தாளர் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அமுலுக்கு வரும்போது மருந்து சாலைகளில் பயிற்றப்பட்ட மருந்தாளர்களே கடமைக்கு அமர்த்தப்பட வேண்டிய நிலைமை உருவாகும்.

நாட்டில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தனியார் மருந்துச் சாலைகள் உள்ளன. இவற்றிலும் பயிற்றப்பட்ட மருந்தாளர்களே கடமைக்கு அமர்த்தப்படவுள்ளனர். (த-9)

## கேள்விக்கொத்து

'தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் தென்மராட்சி கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றுக்கு வழங்கப்பட்ட ' பிரதேசநல சேவைகளை எங்கனம் சந்தைப்படுத்தலாம்' என்ற கேள்விக் கொத்துக்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் செவ்வாய்க் கிழமைக்கு முன்பாக தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (த-108)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(காரைநகர்)

யா/கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை மாலை 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கா.குமாரவேலு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவரும் காரைநகர் இலங்கை வங்கியின் முகாமையாளருமான தா.குகனேசனும், கீரிமலை பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சாவித்திரி தேவி குகனேசனும், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவர்களும், தொழிலதிபர்களுமாகிய லயன் த.சற்குணராசா, கு.புவனேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-246)

## தற்காப்புப் பயிற்சி

அம்பாறை திருக்கோவில் பிரதேச சிவ தொண்டர்களுக்கான தற்காப்புப் பயிற்சி நிறைவடைந்துள்ளது.

அம்பாறை பாவட்டா றாபஸ் குளமைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பயிற்சியின் போது நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கான பரிசில்களை அம்பாறை மாவட்ட தளபதி ராம் வழங்கிச் சிறப்பித்தார்.

தளபதி ராம், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வினோ ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். (கு)

## ஆளில்லா வீடுகளில் திருட்டு

காரைநகரில் ஆட்களில்லாத வீடுகளில் புகுந்து வீட்டுப் பொருட்களை களவாடிவரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகர் சத்திரந்தைப் பகுதியிலேயே இவ்வாறான களவுகள் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக வீட்டின் கதவு நிலைகள், ஜன்னல்கள் உட்பட வீட்டின் பாவனைப் பொருட்களும் களவாடப்பட்டு வருகின்றன.

அதுவும் பட்டப்பகலிலேயே இவ்வாறு இடம்பெற்றுவருவதாகவும் அயலவர்கள் உசாரடைந்தும் திருடர்கள் எடுத்த பொருட்களை போட்டுவிட்டு தப்பி ஓடுவதாகவும் தெரியவருகின்றது. (த-246)

# உப அலுவலகம் திறப்பு

(பருத்தித்துறை)

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களுக்கான உப- அலுவலகம் எதிர்வரும் 3ஆம் திகதி புலோலியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறைஅரசினர் ஆதார வைத்தியசாலையின் முன்புறமாக வுள்ள புலோலி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களின் மேல்மாடியில் அமைந்துள்ள இவ் அலுவலகத் திறப்பு விழா ஏ.என்.எஸ்.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அலுவலகத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன், புலோலி ப.நோ.கூ.சங்க இயக்குநர் சபைத் தலைவர் எஸ்.பெனடிக்ற் ஆறுமுகநாதன், இளைப்பாறிய கிராம சேவை உத்தியோகத்தர் வி.சேதுநாயகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர் என்று யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன் அறிவித்துள்ளார்.

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் மாவட்ட அலுவலகங்கள் திருகோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இந்நிலையத்தின் தலைவராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி எம்.டெஸ்மன் பொன்னாண்டோவும், திட்ட இணைப்பாளராக ஏ.எஸ்.பூவேந்திரனும் செயற்பட்டு வருகின்றனர். (த-52)

# தேர்தலுக்குப் பின்னரும் விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

தேர்தல் முடிவடைந்த பின்னரும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியிருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொதுமக்களின் பாதுகாப்பையும், சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும். வன்முறைகளில் ஈடுபடும் நபருக்கு எதிராக சட்டத்தைக் கடுமையாகப் பிரயோகிப்பதற்கும் தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, வாக்குகளை எண்ணும் நிலையங்களில் பிரத்தியேக பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. வீதித் தடைகள், ரோந்து நடவடிக்கைகள், திடீர் தேடுதல் நடவடிக்கைகள் என்பன அடிக்கடி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்றபோது நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் பாரிய வன்முறைகள் குறித்த செய்திகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லையென பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (த-7)

# சிறுநீரக கோளாறினால் வட-கிழக்கில் பலர் பாதிப்பு

(கொழும்பு)

சிறுநீரகக் கோளாறு காரணமாக இலங்கையில் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கூடுதலானவர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு நடத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இம்மாகாணத்தில் உள்ளவர்கள் கூடுதலாக பாதிக்கப்படுவதற்கு நிலத்தடி நீரில் உள்ளதாது உப்புக்களும், மக்கள் பாவிக்கும் உலோகப் பாத்திரங்களும் பிரதான காரணமாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை வடமாகாணத்தில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இம்மாகாணத்தில் 60 பேர் சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதாகவும் மேலும் 10 பேர் புதிதாக சிறுநீரகக் கோளாறுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-9)

# அடிக்கல் நாட்டு விழா

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலகத்தின் கட்டட அடிக்கல் நாட்டு விழா எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டஅரசஅதிபர்க.கணேஸம், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (சுனாமி) பா.செந்தில்நந்தனன், காரைநகர் முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் யாழ்.மாவட்ட வடக்கு கிழக்கு புனர்நிர்மாணத் திட்ட பிரதித் திட்டப்பணிப்பாளருமான வே.சாம்பசிவம், மாகாண கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் ஸ்குணேசன் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக கலாநிதி பிரம்மஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள், ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

குவைத் அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இதற்கென இருநூற்று நாற்பது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காரைநகர் பிரதேச சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வும் அன்றைய தினம் நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷினால் அடிக்கல் நாட்டப்படவுள்ளது. இதற்கென சமுர்த்தி அதிகாரசபையினால் நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (த-246)

# நிலையான சமாதானம் ஏற்பட அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

(கொழும்பு)

'ஜெனீவாவில் நடைபெற்ற முதலாவது சுற்று சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நாட்டில் சமாதானம் ஏற்படுமென் பதில் நாட்டு மக்கள் அனைவரும் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனர்' என்று ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகரும், பிரதி அமுலாக்கல் அமைச்சின் செயலாளருமான அஜித் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலைமை பெருமளவில் மாற்றமடைந்துள்ளது என்றும், எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களின் போது முக்கியமான பல விடயங்கள் ஆராயப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சமாதான நடவடிக்கைகளும், அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுத்துச்செல்லப்படுவதற்கு சகல தரப்பினர் மத்தியிலும் மனமாற்றம் ஏற்படுவது அவசியமாகும்.

நிலையான சமாதானம் நாட்டில் ஏற்படுவதற்கு பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகத் தலைவர்களும் ஆக்கபூர்வமான வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.

இந்த இலக்கை அடைவதற்கு சகல சமூகத்தினர் மற்றும் சமயத்தினர் மத்தியிலும் பரஸ்பர நல்லிணக்கம் ஏற்படுவது அவசியம் என்றார். (த-9)

# புங்குடுதீவிற்கு வங்கி வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை

(நல்லூர்)

புங்குடுதீவில் மீண்டும் மக்கள் வங்கியை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்ல பணிப்பாளர், மக்கள் வங்கி வலயப் பொது முகாமையாளருக்கும் யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்.

புங்குடுதீவில் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது மீளக் குடியேறி வருகின்றார்கள். ஓய்வூதியம் பெறுபவர்களும் வங்கியை எதிர்பார்த்திருக்கின்றனர்.

நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் வங்கியின் மீள் வருகையை எதிர்பார்த்துள்ளன என்றும், புங்குடுதீவு- நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் புங்குடுதீவு மக்கள் வங்கி முன்பு இயங்கியதாகவும் தற்பொழுது குறித்த கட்டடத்தை வங்கியின் செயல்பாட்டிற்கு வழங்குவதற்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தினர் ஆயத்தமாகவுள்ளதாகவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-134)

# கர்ப்பிணியை வல்லுறவுக்குட்படுத்தி கொன்றவருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய் ஒருவரை வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்த குற்றவாளி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ஏ.டி.ரத்நாயக்க வினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தக் கொலை வழக்குத் தொடர்பான விசாரணைகள் யூரர் சபைக்கு முன்னிலையில் நடைபெற்றன.

1998ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி தெஹிவளை பகுதியில் கர்ப்பிணித் தாய் ஒருவரிடமிருந்து 23ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டதுடன் அவரை வல்லுறவுக்கு உட்படுத்தி கொலை செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (கு)

# மெழுகுதிரி வார்ப்பு பயிற்சி

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினரால் மெழுகுதிரி வார்ப்புப் பயிற்சி கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது 2005ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயற்சியில் சேர விரும்பும் பெண்கள் குருநகர் ஐக்கிய முன்னணியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான பயிற்சிகள் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினரால் வழங்கப்பட்டு வருகின்றன. (த-134)

# போயஸ் கார்டனில் முற்றுகைப் போராட்டம் வேட்பாளர் பட்டியல் மீண்டும் மாறுமா?



(சென்னை)

அறிவிக்கப்பட்ட வேட்பாளர்களில் இரண்டுமுறை மாற்றம் செய்யப்பட்ட பிறகும், அ.தி.மு.கவில் அதிருப்தி தொடர்கிறது. போயஸ்கார்டனில் உள்ள முதல்வர் ஜெயலலிதாவின் வீட்டை முற்றுகைபோராட்டம் நடத்தும் அளவிற்கு அதிருப்தியாளர்கள் சென்றது அ.தி.மு.க தலைமைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பல தொகுதிகளுக்கு வேட்பாளர்கள் மாற்றப்படக்கூடும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க 182 தொகுதிகளில் போட்டியிடுகிறது. சென்னையில் திருவல்லிக்கேணி, சைதாப்பேட்டை, தி.நகர், புரசைவாக்கம், பூங்காநகர், பேரூர், ராதாபுரம், கோவில்பட்டி, விளாத்திகுளம், குளித்தலை, கரூர், பழனி, பவானி உட்பட சில தொகுதிகளில் அறிவிக்கப்பட்ட வேட்பாளர்கள்மீது அதிருப்தி நிலவுகிறது. திருவல்லிக்கேணியில் போட்டியிடும் பதர்சயீது கடந்த பார்லிமெண்ட் தேர்தலில் டி.ஆர்.பாலுவிடம் தோல்வி அடைந்தவர். அதன் பின்னரும் அவருக்கு வக்புவாரிய தலைவர் பதவி வழங்கப்பட்டது.

கட்சிப் பணிகள் மற்றும் தொண்டர்கள் வீட்டிற்கு நல்லது கெட்டது எந்த விஷயத்திலும் கலந்துகொள்ள விரும்பாத அவரை எப்படித் தேர்தலில் போட்டியிட வைக்கலாம் என்று அத்தொகுதி அ.தி.மு.கவினர் கொதிக்கின்றனர். கட்சிக்காக உழைக்கும் அப்பகுதியில் உள்ள ஒரு வட்ட செயலரை போட்டியிட நிறுத்தினால் கூட நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம். ஆனால் கட்சித் தொண்டர்களிடம் எந்தத் தொடர்பும் இல்லாத மேல் மட்டத்தில் மட்டும் பழகும் பதர்சயீதுவை நிறுத்தியிருப்பதால் எளிதாக தி.மு.க. அங்கு வெற்றி பெறும் என்று அ.தி.மு.கவினர் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் சைதாப்பேட்டை தொகுதியில் நிற்கும் செந்தமிழன் கட்சிக்காரர் என்ற தகுதியையும் எம்.ஏ.பி.எல். படித்த வக்கீல் என்ற தகுதியையும் மட்டுமே கொண்டுள்ளார். எதிரியை களத்தில் எளிதாக வீழ்த்துவதற்கு அத்தொகுதியில் மூலை முடுக்கில் உள்ள தொண்டர்களை நுனிவிரலில் தெரிந்து வைத்திருக்கும் சைதைதுரைசாமியை நிறுத்தியிருந்தால் வெற்றி உறுதி என்பது கட்சியின் தலைமைக்கும் தெரியும். ஆனால் என்ன காரணத்திற்காக அவருக்கு சீட் மறுக்கப்பட்டது என்பது புரியாமல் அந்த தொகுதி அ.தி.மு.கவினர் குழம்பிப்போய் உள்ளனர்.

அதேபோல் மத்திய சென்னை மாவட்டத்தில் அடங்கிய ஆயிரம் விளக்கு தொகுதியை அம்மாவட்ட செயலர் பாலகங்காவுக்கு ஒதுக்காமல் தென் சென்னை மாவட்ட செயலர் ஆதிராஜாராமுக்கு ஒதுக்கியிருப்பதையும் அ.தி.மு.கவினர் விரும்பவில்லை.

மேல் மலையனூர் தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட வேட்பாளரும் தற்போதைய எம்.எல். ஏயுமான தமிழ்மொழி ராஜதத்தனை மாற்றக்கோரி சேட்டுஉண்பவர் போயஸ் கார்டனில் விஷம் குடித்தார். இதையடுத்து நேற்று பவானி தொகுதி வேட்பாளர் கருப்பண்ணனை மாற்றக் கோரி போயஸ் கார்டனில் முற்றுகைப் போராட்டம் நடத்த பவானி தொகுதி அ.தி.மு. கவினர் 500 பேர் திரண்டனர்.

உசிலம்பட்டி தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க வேட்பாளர் மகேந்திரன் தி.மு.க கொள்கை பரப்புச் செயலர் செல்வேந்திரனின் மாமன் மகன். பா.ஜ.சார்பில் போட்டியிடும் தேனி பன்னீர்செல்வமும், விஜயகாந்த் கட்சியில் போட்டியிடும் ஏ.கே. டி.ராஜாவும் மகேந்திரனின் உறவினர்கள் என்பதால் அ.தி.மு.கவின் வெற்றி பாதிக்கும் என்று உசிலம்பட்டி அ.தி.மு.கவினர் தலைமைக்கு புகார் தெரிவித்துள்ளனர்.

இப்படி தினமும் அ.தி.மு.க தல்லைமைக்கு பல தொகுதிகளில் வேட்பாளர்களின் அதிருப்தி புகார்கள் குவிந்த வண்ணம் உள்ளது. தேர்தல் பிரசாரத்தை முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்டிருந்தாலும் இன்னும் சில தொகுதிகளில் வேட்பாளர்கள் மாற்றம் இருக்கும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(கு)

# கருணாநிதி மீண்டும் போட்டி!

* 129 தொகுதிகளுக்கு தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிப்பு
* அ.தி.மு.க பாணியில் புதுமுகங்களுக்கு அதிக வாய்ப்பு



(சென்னை)

பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் வேட்பாளர்கள் பட்டியல் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. தொகுதி மாறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட கருணாநிதி மீண்டும் சேப்பாக்கம் தொகுதியிலேயே போட்டியிடுகிறார்.

புதுமுகங்கள் 82 பேருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வேட்பாளர் பட்டியலில் 76 பட்டதாரிகள் இடம்பெற்றுள்ளனர். பழைய எம்.எல்.ஏக்கள் 23 பேருக்கு மீண்டும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக முற்போக்கு கூட்டணியில் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கியது போக 129 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிடுகிறது. இந்தத் தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் மாலை அண்ணா அறிவாலயத்தில் அறிவித்தார்.

இந்தப் பட்டியலில் 13 பெண்கள், 4 முஸ்லிம்கள் மற்றும் 76 பட்டதாரிகள் இடம் பெற்றுள்ளனர். தற்போதைய எம்.எல்.ஏக்கள் 23 பேருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்ட செயலர் வீரபாண்டி ஆறுமுகம் அவரது மகன் ஆ.ராஜேந்திரன் ஆகிய இருவருக்கும் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீரபாண்டி ஆறுமுகம் சேலம் 2 தொகுதியிலும் மகன் ராஜேந்திரன் வீரபாண்டி தொகுதியிலும் போட்டியிடுகிறார். மறைந்த ஆலடி அருணாவின் மகள் பூங்கோதைக்கு ஆலங்குளம் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. (கு)

# ஒரு குடும்ப ஏகாதிபத்தியமா, தமிழக நலனா? தீர்மானிக்கும் தேர்தல் இது. வைகோ பேச்சு

(சென்னை)

ஒரு குடும்பத்தின் ஏகாதிபத்தியமா தமிழகத்தின் நலனா என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் இது என்று வைகோ நேற்று முன்தினம் அமைந்தகரையில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

நான் அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்ததை சந்தர்ப்பவாதம் என்று விமர்சிக்கின்றனர். நாங்கள் எடுக்கும் முடிவை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு தற்குறி அல்ல வைகோ. எதற்காக இந்த முடிவை எடுத்தோம் என்று மக்களுக்கு சொல்வது அரசியல் கட்சியின் கடமை. மக்களை நீதிபதியாக கருதி இந்த முடிவுக்கு நாங்கள் ஏன் தள்ளப்பட்டோம் என்று எடுத்துச் சொன்னேன். எது சந்தர்ப்பவாதம்? பா.ஜவினரை 98ஆம் ஆண்டு தேர்தலில் நாகபாம்பு, விஷப் பாம்பு என்று சொல்லி ஓட்டுக்களை வாங்கி விட்டு அந்த ஓட்டுக்களைக் கொண்டு பெற்ற எம்.பிக்களின் ஆதரவை வாஜ்பாய் அரசுக்கு கொடுத்தார்களே அதுதான் மோசடி வாக்காளர்களை ஏமாற்றிய மோசடி அது.



மாறன் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது இலாகா இல்லாத மத்திய அமைச்சராக இருப்பார் என்று கூறி சாகும் வரை இருந்தாரே? எந்த ஜனநாயக அடிப்படையில் அது நியாயம்? பெசன்ட் நகர் மயானத்திற்கு வாஜ்பாய் வந்துவிட்டுப் போனதும் காங்கிரசுக்கு ஆதரவு தெரிவித்தார்கள். அமைச்சரவையில் இருந்து கொண்டே காங்கிரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். மிசா கொண்டு வந்த காங்கிரசுடன் கூட்டணி வைத்து நேருவின் மகள் வருக என்று சொன்னார்கள் என்று வைகோ மேலும் பேசுகையில் கூறினார்.

(கு)



அசாம் மாநில சட்டசபைத் தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா ஈடுபட்டார்.

இந்திய வலம்

# தேர்தலில் போட்டியிடாமல் வைகோ., திருமாவளவன் திடீர் தியாகம்?

(திருச்சி)

வைகோ, திருமாவளவன் ஆகிய இருவரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என திடீர் தியாக அறிவிப்பால் தி.மு.க. கூட்டணி அதிர்ச்சி அடைந்துள்ளது. துரோகி, கட்சிமாறி, சந்தர்ப்பவாதி என இனி எப்படிப் பிரசாரம் செய்வது என எதிர்க்கட்சியினர் திகைப்பில் ஆழ்ந்துள்ளனர்.

தி.மு.க கூட்டணியில் இருந்து வைகோவின் ம.தி.மு.க. வெளியேறி அ.தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிடுகின்றது. தி.மு.க. ஒதுக்கும் சீட்டுக்களில் உள் ஒதுக்கீடு செய்ய பா.ம.க. முடிவெடுத்த நிலையில் அதைத் தவிர்த்து விடுதலை சிறுத்தைகள் அமைப்பும் அ.தி.மு.கவில் இணைந்துள்ளன.

இவர்களின் இந்த முடிவால் துரோகி, சந்தர்ப்பவாதி, கட்சி மாறி என இதுவரை தி.மு.க. கூட்டணியில் உள்ளவர்கள் ம.தி. மு.க. மற்றும் வி.சிக்களை விமர்சித்து வந்தனர்.

எஸ்.எம்.எஸ். போன்றவை மூலம் எதிர்கட்சியினரின் கிண்டல் பிரசாரம் தொடர்ந்தது. தேர்தல் நெருங்கும் நேரத்தில் எதிர்கட்சியினரின் இந்தப் பிரசாரங்கள் நடுநிலையாளர்கள் மற்றும் அ.தி.மு.கவினரிடையே எடுபடக்கூடுமென வைகோ மற்றும் திருமாவளவன் கருதினர்.

எதிர்க்கட்சியினருக்கு எந்த வாய்ப்பும் அளிக்கக் கூடாது என முடிவெடுத்து இருவரும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துக் கட்சியினருக்கு வாய்ப்பளித்துள்ளனர்.

கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் விருப்பத்திற்கேற்பவே அ.தி.மு.க. அணியில் சேர்ந்தோம் என வெளிப்படையாகக் தெரிவித்த இரு கட்சித்தலைவர்களின் தேர்தலில் போட்டியிடாத அறிவிப்பும் அவர்களின் 'கிளீன் இமேஜை' பன்மடங்கு உயர்த்தியுள்ளது.

இவர்களின் போட்டியிடாத அறிவிப்பால் தி.மு.க. கூட்டணியினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இனி எதைச்சொல்லி தி.மு.க. கூட்டணியில் இணைந்துள்ள இருவருக்கும் எதிராகப் பிரசாரம் மேற்கொள்வது எனத் திகைத்துள்ளனர்.

(கு)

# பொலிஸ் காவலில் இறப்பவர்களுக்கு நஷ்ட ஈடு

பொலிஸ் காவலில் உயிரிழப்பவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று மத்திய உள்துறை மந்திரி சிவராஜ் பட்டீல் தெரிவித்தார்.

பொலிஸ் காவலில் இருக்கும்போது பொலிஸாரின் தாக்குதல்களில் உயிரிழப்போருக்கும் பாலியல் கொடுமைக்குள்ளான பெண்களுக்கும் கொடுங்காயங்களுக்கு ஆளாகி மரணமானவருக்கும் அரசாங்கம் நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று மனித உரிமை அமைப்புகள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் மத்திய அரசாங்கம் இந்த வேண்டுகோளை தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது.

பொலிஸ் காவலில் நீதி என்ற தலைப்பில் 2 நாள் கருத்தரங்கம் நேற்று டெல்லியில் தொடங்கியது. தேசிய மனித உரிமை கமிஷனும் பிரஜா என்ற தொண்டு நிறுவனமும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தன.

கருத்தரங்கை தொடங்கி வைத்து மத்திய உள்துறை மந்திரி சிவராஜ் பட்டீல் பேசுகையில்,

பொலிஸ் காவலில் இருக்கும் போது வன்செயல்களில் பாதிக்கப்படும் நபர்களுக்கு நஷ்டஈடு வழங்க பாராளுமன்றத்தில் அரசு புதிய சட்டமூலத்தை அறிமுகம் செய்துள்ளது. எவ்வளவு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதை நீதிமன்றங்கள் அல்லது நிபுணர் கமிட்டி முடிவு செய்யும். அதனடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்கும் என்றார்.

(கு)

# நெல்சன் மண்டேலா

**த. பாண்டியன்**

## மீள்பார்வை

### தந்தையின் மறைவு! 5



இங்கு பல பெரியவர்கள், குழுத்தலைவர்கள், மூத்தோர் வந்து நெடுநேரம் ரீஜண்டுடன் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். இவர்களில் புகழ்மிக்க மன்னர் நுகுபெங்குகாவின் வழிவழி வந்தவரான சுவேலிபாங்கிலே ஜோயி மிக முக்கியமானவர். இவர் மூப்படைந்து, தளர்ந்து இருந்தார். முகத்தில் சருமம், சுருக்கம் விழுந்து அழுக்கப்பட்டுக் குலைந்த துணிமாதிரி தொங்கும்.ஆனால், இவர் சோசா இன வரலாற்றையும், அவர்களது வீரப் போராட்டங்களையும் வருணிக்கும் போது இளமை புதுப்பிக்கப்பட்டவராகக் காணப்படுவார்.

இத்தகைய பேச்சுக்கள் நடக்கும்போது, தொடக்கத்தில் மண்டேலாவை‘ நீ சின்னப் பையன். இதை எல்லாம் கேட்கக் கூடாது’ என்று சொல்லி விரட்டி விட்டனர். இருந்தாலும் அவர்கள் சுருட்டுப் பற்ற வைக்க நெருப்பைத் தேடியபோதும், தண்ணீர் கேட்ட போதும் நுழைந்து பேசுவதைக் கேட்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் மண்டேலா.

ஜோயிதாத்தா, முதலில் சோசா இன வீர வரலாற்றை சொல்லத் தொடங்கினார் என்றாலும் அடுத்தடுத்து தென்னாபிரிக்கா முழுவதன் வீர வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டத் தொடங்கினார். பல வீரம் செறிந்த மன்னர்களின் வரலாற்றை அடுக்குவார். வெள்ளையர்கள் 1662இல் காலடி எடுத்து வைத்த பின்னர்தான் நாசம் வந்தது என்பதைக் கனல் தெரிக்கக் கூறுவார். எண்ணற்ற பழம்பெரும் மன்னர்கள் நடத்திய போராட்டங்களை வருணிக்கும்போது, சோசா இனமும், சூலு, இதர எல்லா இன மக்களும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான்.வந்த வெள்ளையன்தான் நம்மைப் பிரித்தான். நம்மை மோதவிட்டான். நம்மைச் சுரண்டினான். இந்த வீரக் கதைகள் மண்டேலாவை, சோசா இனக் குழு என்ற வட்டக் கோட்டைத் தாண்டி ஆப்ரிக்கா எனப் பார்க்கவைத்தது. எல்லா இன மக்களையும் சகோதரர்களாகக் கருத வைத்தது. ஒரு பரந்து விரிந்த உலகம் மண்டேலாவின் கண் முன்தோன்றியது. குக்கிராமமும், குன்றுகள் இடையிட்ட அந்தக் குறுநிலப் பரப்பும், கடந்து வந்த பாதைகளாக மறையத் தொடங்கின. உலகம் விரிவடைந்து கொண்டே இருந்தது.

இந்தப் பருவத்தில் மண்டேலாவின் இளமைப் பருவக் காலக் காதல் விளையாட்டு நடந்தது. பாதிரியார் மயோடாலாவுக்கு இரு பெண்கள்..இருவரும் படித்து வந்தார்கள். இவர்களில் இளைய்வள் மீது காதல் கொண்டார் மண்டேலா. ஒருநாள் துணிச்சலுடன் அவளை அணுகி, இழுத்து, வளைத்து தான் அவளை விருப்புவதாகச் சொல்லியே விட்டார். அதைக் கேட்ட அந்தப் பெண், சிரித்துக் கொண்டே ‘நானே உன்னிடம்பேச இருந்தேன். நல்லவேளை நீயே சொல்லிவிட்டாய். மகிழ்ச்சி! ’ என்றாள். இருப்பினும் ரீஜண்ட், பாதிரியார் உள்ளிட்ட குடும்ப ஒப்புதல் இன்றி, எதுவும் நடக்காது என்பதையும் பேசிக்கொண்டனர். இந்த விஷயத்தை இளையவள், மூத்தவளிடம் சொன்னாள். அவள் சீறிப் பாய்ந்தாள். ‘அந்தப் பையன், அவனு டைய அப்பாவின் முழுக் கால் சட்டையை வெட்டி, அரைக்கால் சட்டையாகப் போட்டுக் கொண்டு வருவது சகிக்கவில்லை. சுத்தப் பட்டிக்காட்டுப் பையன். நமக்கு ஒத்துவராது’எனக்கூறி விட்டாள். தங்கை விடாப்பிடியாக, வாதாடியபின் ‘சரி ஒரு சோதனை வைப்பபோம்’ என்றாள். ‘அவனை நாளை மறுநாள் நம் வீட்டிற்குச் சாப்பிட அழைப்போம். பட்டிக்காட்டான் மேஜையில் எப்படிச் சாப்பிடுகிறான் என்று பார்ப்போம்’ என்றாள்.

இதன்படி விருந்துக்கு மண்டேலா அழைக்கப்பட்டார். கோழியை நன்றாக சுக்காக வறுத்து, கோப்பையில் கரண்டி மற்றும் முள் கரண்டியையும் அக்காள் வைத்துவிட்டாள். விரல்களால் சாப்பிட்டுப் பழகிய மண்டேலாவுக்கு சோதனை காத்திருந்தது. முள் கரண்டியால், கோழிச் சிறகைக் குத்திக்கொண்டு, கரண்டியால் இழுத்துப் பார்த்தார். அது கோப்பையில் நழுவி ஒடியது. அதைத் தடுக்கக் கரண்டியைப் போட்ட போது கோப்பையில் அடிபட்டு, இடிபடு தாளம் போடத் தொடங்கிவிட்டது.அனைவரும் மண்டேலாவைப் பார்ப்பது தெரிந்தது. அது மேலும் கூச்சத்தை ஏற்படுத்தியது. ஒரு கை விரலால் அழுத்திக்கொண்டு எப்படியோ இழுத்துப் பிடித்துச் சாப்பிட்டு முடித்தார்.

வெற்றிப் புன்னகை புரிந்தாள் அக்காள். அதற்கும் தங்கை மசியவில்லை. பழகினால் சரியாகிவிடும் என்று கூறிவிட்டு, மண்டேலாவுடன் அன்புடன் பேசியே வந்தாள். உயர்நிலைப் பள்ளிப்படிப்பை முடித்து கிளார்க்பெரி கல்லூரிக்குப் போனபின் கடிதத் தொடர்பு மட்டும் இருந்தது. பின்னர் அதுவும் குறைந்தது. அவளது பெற்றோர், மாற்று இடத்திற்குச் சென்ற பின் தொடர்பே முறிந்துவிட்டது. முதல் காதல் அரும்பிற்று. மலராமல் உதிர்ந்துவிட்டது எனக் கவலையுடன் மண்டேலா குறிப்பிட்டுள்ளார்.

சோசா இனத்தவர் மத்தியில் நீண்டநெடுங்காலமாக ஒரு வழக்கம் இருந்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன், பையன்களின் ஆண் குறிக்கு முன்னால் இருக்கும் தோலை வெட்டி நீக்கி விடுகிற சடங்கு தவறாமல் நடக்குமாம். அன்று முதல் அவன் பருவமடைந்த ஆண் மகனாகக் கருதப்படுவானாம். இந்த வழக்கம் இஸ்லாமியர் மத்தியில் சுன்னத் கல்யாணம் என வழங்கப்படுகிறது. இதே வழக்கம் மதுரை, ராமனாதபுரம், நெல்லை மாவட்டங்களிலுள்ள முக்குலத்தோரிடமும் உள்ளது. சோசா இன மக்களின் வாழ்க்கை முறை பெரும்பாலும், நம் தமிழ் நாட்டில் மதுரை, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டக் கிராம மக்களின் வாழ்க்கை மாதிரியே இருக்கிறது. பல பழக்கவழக்கங்கள் ஒத்துள்ளன.

இந்தச் சடங்கின்போது ஊருக்கு வெளியில், காட்டுப் பகுதியில் ஒரு குடிசை போட்டு, இளைஞர்களை அங்கே போய்ச் சேர்த்து விடுவார்களாம். குறித்த நாளன்று நன்கு தீட்டப் பட்ட பெரிய கத்தியுடன் ஊர்ப் பெரியவர் ஒருவர் வருவாராம். ஒரு கட்டையை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு பையனையும் அழைத்து நுனித் தோலை வெட்டி எடுப்பாராம். எந்தப் பையனும் அழக்கூடாது. சத்தம் போடக் கூடாது. மாறாக வெட்டி முடித்தவுடன் அவர்கள் தாய்மொழியில் ஒரு குரல் எழுப்ப வேண்டுமாம்.

வரிசையில் ஒன்பதாவது பையனாக உட்கார்ந்திருந்தார் மண்டேலா. கத்தியைப் பார்க்கப் பயமாக இருந்ததாம். ஆனால் எட்டுப் பையன்களும் ஓசையே எழுப்பவில்லை. வெட்டி முடிந்தவுடன் ஒலி மட்டுமே எழுப்பினர். பல்லைக் கடித்துக்கொண்டு இருந்தாராம் மண்டேலா. வெட்டியபோது, தேள் கொட்டியது போல ஒரு நொடி வலி இருந்தும், ஒலி மட்டும் எழுப்பி எப்படியோ விஷயம் முடிந்தது என்று நின்மதியடைந்தாராம்.

(தொடரும்)

## தவக்கால சிந்தனை



என் கடவுளாகிய ஆண்டவரே, உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன்

மறை நூல் கற்றுவிட்டால் போதும் என்று எண்ணிக் கொண்டு மற்றவர்களை தங்கள் கால் மனையாக்கும் கூட்டம் ஒருபக்கம் (பரிசேயர்...) மறை நூல் இலக்கமும், திருச் சட்டமும் அறிந்தாலும், மனிதனை மனிதனாக நடத்தும் எண்ணமும் கொள்ளும் மனிதம் மற்றொரு பக்கம் (நிக்கோதேமு) இவர்களின் உண்மை நிறம் தெரிந்தது எப்போது? இயேசுவைப் பற்றிய விவாதத்தில்மக்களிடையே ஏற்பட்ட பிளவில் அல்லவா மனிதனை மனிதனாக இனம்கண்டு கொள்ளச் செய்வது அவனது இரக்கச் செயலே. ஆனால் இன்றைய நற்செய்தி வாசகத்தில் இறைவனையே இனம்கண்டுகொள்ள இயலாத நிலை நிலவக காண்கிறோம். தன்னலம், கர்வம் போன்ற தீமைகளால் சமூகதத்தில் ஏற்படும் பிரிவினைகளை ஒழித்து சமூக ஒற்றுமை காக்க முனைவோம். காவலன்

## பாடசாலையை இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமாம்

(சாவகச்சேரி)

வெகு காலமாக இயங்காதிருக்கும் தென்மராட்சி கெருடாவில் பாடசாலையை இயங்கவைக்க மக்கள் எடுத்த முயற்சிக்கு கல்விப் பணிப்பாளர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அவ்வூர் மக்களது வேண்டுகோளை அடுத்து பாடசாலைச் சுற்றாடலுக்கு விஜயம்செய்ததென்மராட்சிக் கல்விப் பணிப்பாளரும் அவரது குழுவினரும் அப்பிரதேச மாணவர்களது கஷ்டத்தை உணர்ந்து யுத்தத்தால்சீரழிந்தபாடசாலைக்கட்டத்தை திருத்தி அமைத்து, பாடசாலையை இயக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (த-29)

## ஆயுதக் கொள்வனவு முறைகேடு தொடர்பான விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கடற்படைக்கான ஆயுதக் கொள்வனவு முறைகேடுகள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடற்படைக்கு 2001ஆம்ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டமை குறித்து இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தி வருவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவராக நீதிபதி நிமல் காமினி அமரதுங்கவும், செயலாளராக சிரேஷ்ட அரசஅதிகாரிஎட்மண்ட் ஜயசூர்யவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்பிலுள்ள மேற்படி ஆணைக்குழு அலுவலகத்தில் ஆயுதக்கொள்வனவு பற்றிய விபரங்களை அறிந்தவர்கள் தகவல்கள் தெரிவிக்கலாம் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (த)

## மானிப்பாய் இந்து முதலிடம்

கடந்த மாதம் 3,4,8ஆம் திகதிகளில் சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றுது. முதலாவது இறுதிநாள் நிகழ்ச்சிகள் யாவும் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும், 2ஆம் நாள் நிகழ்ச்சிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நடைபெற்றது.

இதில் மானிப்பாய் இந்துக்கல்லூரிஆண்கள் பிரிவில் 24 முதலிடங்கள், 15 இரண்டாம் இடங்கள், 06 மூன்றாம் இடங்கள் உட்பட 45 வெற்றிகளைப் பெற்று முதன்மை வகித்தது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி சார்பாக 15 வயதுப்பிரிவில் அ.நிரோஜன் 15 புள்ளிகளையும் 19 வயதுப் பிரிவில் சி.வினோத், தெ.ரூபின் தலா 15 புள்ளிகளைப்பெற்று முதன்மை வீரர்களாகவும் தெரிவு செய்யப் பட்டனர்.

இம்முறை ஒவ்வொரு வயது பிரிவினருக்கும் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் வயதுப் பிரி வினருக்கான கேடயங்களும் வழங் கப்பட்டன. இதில் ஆண்கள் பிரிவில் மானிப்பாய்இந்துக்கல்லூரி 15, 17, 19 வயதுப்பிரிவில் அதிகூடிய புள்ளி களைப் பெற்று வெற்றிக் கேடயங் களைப்பெற்றுக்கொண்டது. (த

## குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்த பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோருகிறார் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(வவுனியா)

வவுனியா பொலிஸ் பிரதேசத்திற்குள் இடம்பெறும் குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமென்று துண்டுப்பிரசுரம் மூலம் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுமக்களின் ஒத்துழைப்பு கிடைக்காமல் பொலிஸாரினால் மாத்திரம் குற்றங்களை தடுத்து நிறுத்துவது கடினமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். வவுனியா பொலிஸ் பிரதேசத் தில் கடந்த 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை பல குற்றச்செயல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுள் ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொலை, கொள்ளை ஆகியவற்றுடன் குண்டு வீச்சு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதுடன்பொது மக்கள் சுடப்பட்டு படுகாயமடைந்துள்ளதாக வும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரி வித்துள்ளார்.

இவ்வாறான குற்றச்செயல்க ளைத் தடுப்பதற்கு பொதுமக்கள் தகவல்களை தந்துதவ வேண்டு மென்றும், பொலிஸாருக்கு ஒத்து ழைப்பு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுமக்களிடமிருந்து கிடைக் கப் பெறும் தகவல்களை இரகசிய மாக பேணப்படுமென்றும் அவ வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுர தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-9

## பயிற்சிப்பட்டறை

கழிவகற்றலுடன் தொடர்புபட்ட மாநகர உத்தியோகத்தர்களுக்கு திண்மக் கழிவகற்றல் பற்றிய ஒரு நாள் பயிற்சிப் பட்டறை இன்று காலை 9.00மணிக்கு பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில்நடைபெறவுள்ளது. (தி



ஜெர்மன் நாட்டின் தென் பகுதியில் பலத்த மழையின் காரணமாக சாலைகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. தீயணைப்புத் துறையினர் படகில் சென்று மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்

# யுரேனியம் செறிவூட்டுவதை 30 நாட்களுக்குள் நிறுத்த வேண்டும்

## ஈரானுக்கு ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில்காலக்கெடு

யுரேனியம் செறிவூட்டும் பணிகளை 30 நாட்களுக்குள் நிறுத்த வேண்டும் என ஈரானுக்கு ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் கெடு விதித்துள்ளது. ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடுகள் கொண்டுவந்துள்ள இந்த தீர்மானத் துக்கு மற்ற 15நாடுகளும் ஒரு மனதாக ஒப்புதல் அளித்துவிட்டன.

ஈரான் யுரேனியம் செறிவூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது அணு ஆயுதம் தயாரிப்பதற்கே என அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது. ஆனால் மின்சாரம் தயாரிப்பதற்காகவே யுரேனியம் செறிவூட்டுகிறோம் என ஈரான் மறுக்கிறது. ஈரானை அமெரிக்கா நம்பவில்லை. பிரிட்டன் பிரான்ஸ் உள்ளிட்ட வல்லரசுகள் உதவியுடன் ஈரானில் அணு சக்தி உற்பத்தியை தடை செய்ய அமெரிக்கா தீவிர முயற்சி எடுத்து வந்தது.

ஈரானில் அணுசக்தி உற்பத்தி நடவடிக்கைகளை முழுவதுமாக தடைசெய்ய ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் மூலம் தீர்மானம் கொண்டுவர அமெரிக்கா திட்டமிட்டது பாதுகாப்புகவுன்சிலின் வீட்டோ அதிகாரம் பெற்ற நிரந்தர உறுப்பு நாடுகள் ஒப்புதல் பெறவும், நிரந்தர உறுப்பினர் அல்லாத 15நாடுகள் இந்த தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கவும் அமெரிக்கா கடும் முயற்சி மேற்கொண்டது.


ஈரானுக்கு எதிராக கடுமையான தீர்மானம் கொண்டுவர ரஷ்யா மற்றும் சீனா முட்டுக்கட்டை போட்டு வந்ததால் தீர்மானம் ஒருமனதாக முடிவாக அவ்வப்போது தடைகள் ஏற்பட்டன.. கடுமையான நடவடிக்கைகளில் இருந்து ஈரானைக் காப்பாற்ற ரஷ்யா தரப்பில் பல யோசனைகள் தரப்பட்டன. எனினும் இவற்றுக்கு ஈரானும் இசையவில்லை.

இந்நிலையில் ஈரானுக்கு எதிரான பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தை இறுதி செய்ய மூன்று வாரங்களாக அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய வீட்டோ அதிகாரம் பெற்ற நாடுகளின் வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தை நடந்து வந்தது.

இந்த பேச்சுவார்த்தையின் கடைசி கட்டமாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸ் மற்றும் ரஷ்ய அமைச்சர் செர்கேலாப்ரோ கூடி விவாதித்ததை அடுத்து தீர்மானம் இறுதி வடிவம் பெற்றது. இதன்படி யுரேனியம் செறிவூட்டும் பணிகளை இன்னும் 30நாட்களுக்குள் ஈரான் நிறுத்த வேண்டும் சர்வதேச அணுசக்திக் கழகம் இதை கண்காணித்து ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலுக்கு 30 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்கள் உட்பட 15 உறுப்பு நாடுகளும் ஒரு மனதாக இந்த தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளன.




எனினும் இந்தத் தீர்மானத்தை சாக்காக பயன்படுத்தி எந்தவொரு வல்லரசு நாடோ அல்லது நாடுகளோ இணைந்து பாதுகாப்பு கவுன்சில் அனுமதி இல்லாமல் ஈரானுக்கு எதிராக பொருளாதார தடை உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என ரஷ்யா மற்றும் சீனா தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. முன்னதாக ஈரானுக்கு 14 நாட்கள் மட்டுமே அவகாசம் தரவேண்டும் என பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் கூறின. ரஷ்யாவும், சீனா கேட்டுக்கொண்டதற்கு இணங்க 30 நாட்களாக அவகாசம் நீட்டிக்கப்பட்டது. ஈரானை வழிக்கு கொண்டுவர இந்த நடவடிக்கையே போதும் என அமெரிக்கா தரப்பில் நம்பப்படுகிறது. (கு)



ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம் கசகஸ்தானில் உள்ள பைகானுர் ஏவுதளத்திலிருந்து நேற்று முன்தினம் சர்வதேச விண் ஆராய்ச்சி நிலையத்துக்குப் புறப்பட்டது.

# அமெரிக்க–இந்திய வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சு

(வாஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைசை இந்திய வெளியுறவு செயலர் ஷியாம் சரண் சந்தித்து பேசினார் அப்போது இந்திய அமெரிக்க அணு சக்தி உடன்பாட்டை அமுல்படுத்துவது குறித்து இருவரும் விவாதித்தனர்.



ஷ்யாம் சரண் கண்டோலிசா

இந்தியா-அமெரிக்கா இடையே அணு சக்தி ஒப்பந்தம் சமீபத்தில் கைச்சாத்தானது இது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுநடத்துவதற்காக இந்திய வெளியுறவு செயலர் ஷியாம் சரண் அமெரிக்கா சென்றுள்ளார். அவர் அமெரிக்க அரசியல் விவகார இணை அமைச்சர் நிகோலஸ் பேர்ன்சை சந்தித்து பேசினார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைசை சந்தித்தார். அப்போது பல்வேறு இருதரப்பு பிரச்சினைகள் குறித்தும் குறிப்பாக சமீபத்தில் கைச்சாத்தான இந்திய–அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை முன்னோக்கி எடுத்து செல்வதற்கான நடவடிக்கைகள் குறித் தும் இருவரும் விவாதித்தனர்.

இந்தியா–அமெரிக்கா இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்தை விரைவுபடுத்துவதற்காக அமெரிக்க பாராளுமன்றுடன் இணைந்து பணியாற்றுவதற்கு புஷ் அரசு இந்தியாவுக்கு உறுதி அளித்துள்ளது. அணுசக்தி ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான தொழில் நுட்ப ஒப்பந்தம் அமெரிக்க பாராளுமன்றத்தின் ஒப்புதலை பெறவேண்டும். எனவே இதுகுறித்து இருநாடுகளின் மூத்த அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்தினர் என்று வட்டாரங்கள் தெரிவித்தன. (கு)

உலக தரிசனம்

# தெரசாவின் சிலை வைக்க முஸ்லிம்கள் எதிர்ப்பு

அன்னை தெரசா அல்பேனியா நாட்டில் பிறந்தவர். இருந்தாலும் இந்தியாவில் குடியேறி ஏழைகளுக்கு சேவை செய்து பெரும்புகழ் பெற்றார்.

அவருக்கு சொந்த நாடான அல்பேனியாவில் ஷ்கோடர் நகரில் சிலை வைக்க தீர்மானிக்கப்பட்டது. ஷ்கோடர் நகரசபை இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது. இந்நிலையில் அல்பேனியா நாட்டு முஸ்லிம்கள் அன்னை தெரசாவுக்கு சிலைவைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அல்பேனியாவில் முஸ்லிம்கள் 70 சதவீதம் பேர் உள்ளனர். மீதி 30சதவீதம் தான் கிறிஸ்தவர்கள். இருந்தபோதிலும் அங்கு மதவேறுபாடுகள் மதச்சண்டைகள் கிடையாது மத ஒற்றுமை அதிகம். கலப்புத் திருமணங்களும் அங்கு அதிகம்.

இருந்த போதிலும் முஸ்லிம்கள் தெரசாவின் சிலை வைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த சிலை முஸ்லிம்களின் மத உணர்வை புண்படுத்தும் என்று அவர்கள் கூறியுள்ளனர். சிலையை பொது இடத்தில் வைக்கக்கூடாது ஏனெனில் தெரசாவை நாங்கள் மதத்தலைவராகத் தான் பார்க்கிறோம் என்று முஸ்லிம்கள் கூறியுள்ளனர். (கு)

# அமெ.ஜனாதிபதிக்கு கொலை மிரட்டல் விடுத்த 13வயதுச் சிறுவன்

அமெரிக்க ஜனாதிபதி புஷ்சுக்கு ஈ.மெயில் மூலம் கொலை மிரட்டல் விடுத்ததாக 13வயது சிறுவன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. புஷ் சின்சினாட்டி நகருக்கு வரவிருக்கிறார்.

இந்த நிலையில் அந்த நகர மேயருக்கு 2 ஈமெயில்கள் வந்துள்ளன. அந்த ஈமெயில்களில் புஷ்சுக்கு கொலை மிரட்டல் விடுவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேயர் பொலிஸில் புகார் செய்தார். இதைத்தொடர்ந்து பொலிஸார் அந்த சிறுவனின் வீட்டில் சோதனை நடத்தினர். அங்கு புஷ்ஷை கொலைசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவார் என்று நம்பக்கூடிய அளவுக்கு எந்த ஆதாரமும் அந்த சோதனையில் கிடைக்கவில்லை என்று பொலிஸார் கூறினார்கள். புஷ்ஷின் வரலாற்றை அந்தச் சிறுவன் நன்கு தெரிந்து வைத்திருக்கிறான் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (கு)

# சுற்றுலாப் படகு கவிழ்ந்து 48 பயணிகள் பலியாயினர்

சொகுசு படகு நடுக்கடலில் கவிழ்ந்ததில் 48பேர் பலியானார்கள். அரபிக்கடல் பகுதியில் உள்ளது பாக்ரைன். 33 குட்டித் தீவுகளை கொண்டது இந்த நாடு.

இந்த நாட்டுக்கு சொந்தமான ஒரு படகு சுற்றுலா பயணிகளை ஏற்றிக்கொண்டு சுற்றுலா தீவுக்கு புறப்பட்டுச்சென்றது. அந்த படகில் 50பேர்களை மட்டுமே ஏற்றி செல்ல முடியும். ஆனால் 150க்கும் மேற்பட்டவர்கள் அந்த சொகுசு படகில் இருந்தனர். மனாமாவை அடுத்து ஆல்முகாரக் தீவு அருகே வந்தபோது அந்த படகு நடுக்கடலில் திடீர் என்று கவிழ்ந்தது.

இதில் படகில் இருந்த சுற்றுலா பயணிகளில் 48பேர் கடலில் மூழ்கிபலியானார் கள். கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த மற்றவர்களை மீட்புப் படையினர் மீட்டனர். பலியான சுற்றுலாப் பயணிகள் இங்கிலாந்து தென் ஆப்பிரிக்கா எகிப்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். (கு)



சர்வதேச விண் ஆராய்ச்சி நிலையத்துக்கு செல்லும் சோயூஸ் விண்கலத்தில் பிரேசில் நாட்டு விண்வெளி வீரர் மார்கோஸ் பான்டஸ், அமெரிக்காவின் ஜெப்ரி வில்லியம், ரஷ்ய வீரர் பாவெல் வினோகிரேடோவ் ஆகியோர் பயணிக்கின்றனர்

எவ்வளவுக்கு எவ்வளவு கெட்டவர்களாக இருக்கின்றார்களோ அவ்வளவுக்கவ்வளவு துன்பங்களை மனிதர்கள் அனுபவிக்கின்றார்கள்.
-பிளேட்டோ

# வலம்புரி

## சீரற்ற யாழ்.மின்சார சேவை மௌனித்துப்போன ஊடகங்கள்

அரச அதிகாரிகள் பொதுமக்களுடன் ஏறிப்பாய்ந்து விழும் அநாகரியத்தனத்தை நேற்றைய தினம் இப்பகுதியில் தந்தோம்.

அதற்காகப் பொதுமக்களிடம் இருந்து கிடைத்த ஆதரவு வார்த்தைகள் அப்பாடா! எத்துணை அமுக்கத்தில் அந்த 'அநீதி'யை மக்கள் அனுபவித்தனர் என்பதை புரிய வைத்தது.

கூடவே இன்னுமோர் விடயத்தையும் யாழ். குடாநாட்டு மக்கள் சுட்டிக்காட்டினர். யாழ்ப்பாண மின்சார சபையின் சேவையே அது.

ஐயா! ஒழுங்கற்ற மின்சார சேவை கண்டும் ஊடகங்கள் ஏன் மௌனித்துப் போயுள்ளன என்பது அவர்களின் கேள்வி. பொதுமக்களின் அர்த்தபுஷ்டியான கேள்விக்கு நியாயம் கிடைக்க குரல் கொடுப்பது பொறுப்பு வாய்ந்த ஊடகம் ஒன்றின் பணி என்பதும், அதற்கான உரிய விளக்கத்தைத் தருவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

அந்த வகையில் கடந்த பல மாதங்களாக யாழ்ப்பாண மின்சார சபையின் சேவை ஒழுங்கற்றிருப்பது கண்கூடு.

எந்நேரமும் மின்சாரம் நின்று போகலாம் என்ற நினைப்பைத் தவிர யாழ்ப்பாண மின்சார சபையின் சேவையை மகிழ்வோடு நினைத்துக் கொள்ளும் நிலையில் பொதுமக்கள் இல்லை என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

பொறியியலாளர்கள், பகுதித் தலைவர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உயர்ந்த கட்டணம் விதித்து யாழ்ப்பாணத்து மக்களின் காசை வசூலிக்கும் கணக்குப் பகுதிகள் என பலதரப்பட்ட நிர்வாகப் பிரிவுகள் இயங்குகின்ற போதிலும் அடிக்கடி மின்சாரம் நின்று போவது ஏன்?

அவ்விதம் தடைப்பட்டுப் போவதை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாது? மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டுப் போவது குறித்து கொழும்பு நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தியும் அவர்கள் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லையா? என்ற பொதுமக்களின் கேள்விகளுக்கு யாழ்ப்பாண மின்சார சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பொறுப்பாகப் பதிலளிக்க வேண்டும்.

பதிலளிக்க முன்னர், கூல்எயார் சூடாகாமல், கூலாகிப் பதிலளிப்பதே நல்லதாகும்.

# தமிழரின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி

## த.தே.கூ.பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன்

(அம்பாறை)

கொலை அச்சுறுத்தல், அரச , ஒட்டுப்படைகளின் நெருக்குவாரங்கள் மத்தியிலும் மூன்று பிரதேச சபைகளில் தமிழரசுக் கட்சியைப் பெரு வெற்றி பெற வைத்து பிரதேச வாதத்திற்கும், துரோகிகளுக்கும் தென் தமிழீழத்தில் இடம் இல்லை என்பதை சர்வதேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பிரதேசத்தில் உள்ள காரைதீவு, திருக்கோவில், ஆலையடிவேம்பு ஆகிய மூன்ற தமிழர் பிரதேசங்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி போட்டியிட்டு பெரு வெற்றி வாகை சூடியுள்ளது. இது தமிழர்களுடைய ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றியே ஆகும். தமிழ் மக்களுக்கு நன்றி தெரிவித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும், எமது தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு -கிழக்கினைப் பிரிப்பதற்கு பிரதேச வாதங்களை முன்வைத்து, எமது தாயகப் போராட்டத்தினை பலவீனப்படுத்த கடந்த 58 வருடங்களாக திட்டமிட்ட முறையில் தமிழின அழிப்பில் ஈடுபடும் சிங்கள தேசத்திற்கும் அரசியல் நாற்காலிகளுக்காக தாவி அலைபவர்களுக்கும், சலுகைகளுக்காக தமது இனத்திற்கே துரோகம் இழைத்து வருபவர்களுக்கும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக வழங்கிய சாட்டை அடி இதுவாகும்.

எமது தன்னாட்சி உரிமை, தாயகம், தேசியம் ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் இந்த உள்ளூராட்சி சபைகளில் தேர்தல் மூலம் நாம் தோற்றம் பெற்றுள்ளோம்.

எனவே எங்கள் இனத்தின் மீதான சிங்கள தேசத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிவரும் எமது தமிழ்த் தேசியப் படையான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு என்றும் நாம் உறுதுணையாகவே நிற்கின்றோம். மக்களே விடுதலைப்புலிகள். விடுதலைப்புலிகளே மக்கள் என்பதை தென் தமிழீழ மக்கள் இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)

# செயலிழக்கும் நிலையில் மனித உரிமை ஆணைக்குழு?

(கொழும்பு)

சுயாதீன அமைப்பான மனித உரிமைகள் ஆணைக்குழு செயலிழந்து போகும் நிலையில் இருப்பதாக ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் நிர்வாக இயக்குநர் பசில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஆசிய மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் தலைவர் இல்லாத நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

அரசியல் யாப்புசபை உருவாக்கப்படாததால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரை நியமிக்கப்படாத நிலைமை ஏற்படுகிறது. அரசியல் யாப்பு சபையின் சிறுபான்மைக் கட்சி உறுப்பினர் யார் என்ற விடயத்தில் ஜே.வி.பிக்கும் தமிழ்க் கட்சிக்கும் இடையேயான முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசியல் யாப்பு சபை உருவாக்கப்படாததால் ஏற்கனவே தேசிய பொலிஸ் ஆணையம், நீதித்துறை சேவை ஆணையம் ஆகியவை முடங்கியுள்ளன. பொலிஸ் மற்றும் நீதித்துறையின் நாளாந்தப் பணிகளுக்குப் பொறுப்பானவை இந்த ஆணையங்கள். இவ்விரு ஆணைக்குழுக்களும் செயல்படாத நிலையில் அதன் அதிகாரங்கள் அனைத்தும் பொலிஸ் மா அதிபருக்கும் தலைமை நீதிபதிக்கும் மாற்றப்படும் நிலை உருவாகி உள்ளது.

பொலிஸ் மற்றும் படைத்துறையினர் மீதான குற்றச்சாட்டுக்களை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரித்து வந்தது. மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல்களையும் அக்குழு விசாரித்தது.தற்போது மனித உரிமைகள் ஆணைக்குழு முடங்கினால் இந்த விசாரணைகளும் இடைநிறுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# நியாயமான முறையில் தேர்தல் நடந்து முடிந்துள்ளது -பவ்ரல்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெற்றதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், தேர்தலின் போது சில வன்முறைச் சம்பவங்களும், தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்களும் இடம் பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்களில் அதிகமானவை ஆளும் கட்சியினால் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சி வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் தினத்திற்கு முன்பு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டதால் வன்முறைச் சம்பவங்கள் பெருமளவு குறைந்தது.

முதல் முறையாக அந்தத் தேர்தலில் அடையாள அட்டை கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. பல வாக்காளர்கள் தம்மை அடையாளப்படுத்த எதுவித ஆவணங்களையும் சமர்ப்பிக்காத போதிலும் அவர்களை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கை வெற்றிகரமாக அமைந்ததாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை குறித்து பவ்ரல் அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

இதனால் 2இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாக்களிக்க முடியாது போனதாகவும், இதனைக் கருத்தில் கொண்டு இலங்கை முழுவதற்குமான தேர்தலை நடத்தக் கூடிய அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துமாறும் அந்த அமைப்பு அரசாங்கம் உட்பட அனைத்து தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்துள்ளது. (கு-9)

# அடையாள உண்ணாவிரதம்

மட்டக்களப்பு தும்பங்கேணி கிராமத்தில் அன்னை பூபதியின் 18ஆவது ஆண்டு நிறைவையொட்டி கடந்த செவ்வாய்க்கிழமை தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்தில் பொதுமக்களினால் அடையாள உண்ணா நோன்பு அனுஷ்டிக்கப்பட்டது.


இதில் பொதுச்சுடரினை திக்கோடை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சசிதரன் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை போரதீவுப்பற்று பிரதேச பொறுப்பாளர் செல்வ மாமா ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான ஈகைச்சுடரினை வெல்லாவெளி பிரதேச மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் எம்.சதாசிவம் மற்றும் பாடசாலை அதிபர் வே.லோகேஸ்வரன், மாணவன் சிவானந்தன் ஆகியோர் ஏற்றினார்கள். பின்னர் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை மாவீரர் சத்தியனின் தந்தையான நல்ல தம்பி அணிவித்தார்.

தியாகச் சுடர் அன்னை பூபதியின் தியாகம், சிந்தனை, அவர் மண் மீது, மக்கள் மீது வைத்திருந்த பற்றுறுதி, இன்றைய சமகால அரசியல் நிலைப்பாடு போன்ற விடயங்கள் உள்ளடக்கிய வகையில் வெல்லாவெளி பிரதேசமேம்பாட்டு பேரவைத் தலைவர் சதாசிவம் வெல்லாவெளி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செல்வ மாமா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இறுதியாக பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.நடேசனின் நன்றியுரையுடன் உண்ணா நோன்பு நிகழ்வு நிறைவு பெற்றது. இதில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். (கு)

## சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்



### முதலாம் திருவிழா

இராகம்-கௌரி மனோகரி தாளம் -ஆதி

பல்லவி

மணிகண்டா உன்னை நாம் மறந்தாலும் எம்
நாவென்றும் மறவாதே - ஓம் சாமியோ சரணம் ஐயப்பா
- மணிகண்டா

அனுபல்லவி

வாரணம் முன்னழைக்க வந்தருள் செய்தவனே
எங்கள் மணிகண்டா வரமருள்வாயே
- மணிகண்டா

சரணம்

தாரணியில் உனது தாமரைப் பாதமல்லால்
தஞ்சமென் றறியாத தனயனுக் கருள்வாயே
பூரணனே சகல புவனங்களும் இயங்க
காரணமாகிய மணிகண்டனே சரணம்
- மணிகண்டா

ஆக்கம்-ஐயப்ப அடியவர்

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஒருவன் தான் எதுவுமே செய்யவில்லை என்று நினைத்து அந்த நிலையை அப்படியே தக்கவைத்துக்கொண்டிருப்பதும் கூட, ஒரு செயல் என்று தான் வகைப்படுத்தப்படும். அந்தநிலையில் உங்கள் உடம்பு உங்களுடைய சுய நிலையாகிய ஆத்மாவின் மீது சுமத்தப்படுகிறது. எதையுமே சுமக்க விரும்பாத சுயநிலையாகிய ஆத்மாவுக்கு, உடலின் செயலிழந்த நிலையே ஒரு சுமை ஆகிவிடுகிறது.

சுவாமி விவேகானந்தர்

| கட்சி | மாநகர சபை | நகர சபை | பிரதேச சபை | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூ. | 09 | 17 | 198 | 224 |
| ஐ.தே.க. | 03 | 15 | 16 | 34 |
| தமிழரசுக் கட்சி | - | 01 | 04 | 05 |
| ஜனநாயகக் கட்சி | - | 01 | - | 01 |
| ஜே.வி.பி. | - | - | 01 | 01 |

## தேர்தல் வன்முறை; இருவர் உயிரிழப்பு

உள்ளூராட்சித் தேர்தல் வன்முறைகளால் இருவர் உயிரிழந்துள்ளனர். வெலிகமவில் நடைபெற்ற தேர்தல் வன்முறையில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என வெலிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதேபோன்று இலங்கையின் தெற்குப் பகுதியான கரம்பான்கோட்டைப் பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வன் முறையில் ஐ.தே.கட்சி ஆதரவாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். (ச-4)

## உணவுச் சுகாதார உரிமம் பெறுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

யாழ்.மாவட்டத்திலுள்ள உணவகங்கள், குளிர்பான நிலையங்கள், சுவையூட்டிய சிற்றுண்டி வகை விற்பனையாளர்கள், களஞ்சியம் மற்றும் ஏனைய உற்பத்தி பொருட்களின் நிலையங்கள்ள வைத்திருப்போர் அனைவரும் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவினை மேற்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

உற்பத்திப் பொருட்களுடன் முகமாலை தடை முகாம் ஊடாக வன்னிப் பகுதிக்கு வரும்பொழுது தமிழீழ சுகாதார சேவைகளின் வருடாந்த உணவு சுகாதார உரிமம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஆலயங்களில் உற்சவ காலச் செயற்பாடுகளுக்கு உணவு விற்பனையில் ஈடுபடும் போது உணவுப் பாதுகாப்பிற்கான சிபார்சு உணவு உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். இல்லாவிடின் உற்பத்தி விற்பனைக்கு அனுமதிக்கப்படமாட்டாது என யாழ்.மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் அறிவித்துள்ளது.

இது தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளவும் மேலதிக விபரங்களைப் பெறுவதற்கும் வாரத்தில் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் சகல ஆவணங்களுடனும் பளையில் உள்ள தமிழீழ சுகாதார சேவைகளின் பிரதேச பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## எரிபொருளின் விலையை அதிகரிக்க திறைசேரி அவசர வேண்டுகோள்

(கொழும்பு)

எரிபொருள் விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரி எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருளுக்காக வழங்கப்படும் மானியத்தினால் திறைசேரிக்கு ஏற்படும் நட்டத்தை இனிமேலும் தாங்கிக் கொள்ள முடியாமையினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுவதாக திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களாக எரிபொருளுக்காக அரசாங்கம் வழங்கிய மானியத்தினால் திறைசேரிக்கு 720 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோலுக்கு நான்கு ரூபாவும் ஒரு லீற்றர் டீசலுக்கு ஏழு ரூபாவும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு முப்பது ரூபாவும் பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்திற்கு நட்டம் ஏற்படுகின்றது.

மாதாமாதம் மேற்கொள்ளப்படும் கணக்கெடுப்புக்கமைய பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்திற்கு பெப்ரவரி மாதத்தில் 240 கோடி ரூபாவும் மார்ச் மாதத்தில் 260 கோடி ரூபாவும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் விலைகள் அதிகரிக்கப்படலாம் என்றும் பெற்றோலிய கூட்டுஸ்தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-4)

## மதுபோதையில் வேகமாகக் கார் ஓட்டிய இளைஞன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(குனங்கிளப்பு)

மதுபோதையில் கார் ஓட்டிச் சென்ற இளைஞன் ஒருவர் வீதியில் சென்றோரை முட்டி மோதினார். இச்சம்பவம் நேற்று ஏ-9 வீதியில் நுணாவிலில் இருந்து சாவகச்சேரி வரையான பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உரும்பிராயிலிருந்து சாவகச்சேரி சென்றவர் குறிப்பிட்ட பகுதியில் அதிவேகமாகக் காரை ஓட்டியுள்ளார்.

இதன்போது சென்ற பலர் வீதியோரமாக ஒதுங்கிக் கொண்டனர். நுணாவில் பகுதியில் அதிவேகமாகச் சென்ற அவரை இராணுவத்தினர் வழி மறித்து தாக்க முற்பட்ட போதும் அவர் அதிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவத்தை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் அவரைப் பின்தொடர்ந்து சென்று சாவகச்சேரியில் வைத்து மடக்கிப் பிடித்தனர்.

பின்னர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் அவரையும் அவர் செலுத்திய காரையும் ஒப்படைத்தனர். பிரஸ்தாப இளைஞனின் அதிவேக ஓட்டத்தில் சிக்கி ஆறு சைக்கிள்கள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் சேதமாகிய நிலையில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அவரை விசாரணை செய்த போது தனது காதலி பற்றியும் காதல் பற்றியுமே புலம்பியதாக அப்பகுதி இளைஞர்கள் தெரிவித்தனர். (ச-37)

## ஆலோசகர் பாலாவின் கூற்றுக்கு பாகிஸ்தான் தூதரகம் மறுப்பு

கிழக்கில் இயங்கும் ஜிகாத் முஸ்லிம் குழுவிற்கும் பாகிஸ்தான் புலனாய்வுத் துறைக்கும் தொடர்பு இருப்பதாக விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்த கருத்தை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக அத்தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாலசிங்கத்தின் கூற்றில் சிறிதளவு உண்மை கூடக் கிடையாது. இறைமை உள்ள நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு செய்வது பாகிஸ்தானின் கொள்கைக்கு முரணானது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏப்பிரல் இரண்டாம் திகதி வரை பாகிஸ்தானில் தங்கியிருக்கும் இலங்கை ஜனாதிபதி வர்த்தகம், சுற்றுலா, கல்வி, கலாசாரம், ரயில்வே தொடர்பான பல்வேறு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரு தரப்பினரும் பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்களுக்கே முன்னுரிமை கொடுப்பர் என்று இராஜதந்திர வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்பட்டாலும் அவை பற்றி உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படுவதாகவில்லை. (ச-6)

## சதுரங்க சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மெற்றோ பொலிற்றன் ஒப்பிஸ் மற்றும் நவகலா நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழ்ச் செய்தித் தகவல் மையம் நடாத்தும் பாடசாலைகளுக்கிடையிலான திறந்த சதுரங்கச் சுற்றுப் போட்டி திட்டமிட்டபடி இன்றும் நாளையும் யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் காலை 8.30 மணிக்கு குறிப்பிட்ட மண்டபத்திற்கு வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

அத்துடன் விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்களின் வசதிக்காக மண்டபத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து போட்டியில்பங்கு பற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## வெற்றிலைச் சின்னம் இல்லாதது வாக்குகள் குறையக் காரணம்

### ஜே.வி.பி. கவலை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெற்றிலைச் சின்னத்தை விட்டுக் கொடுத்தமை ஜே.வி.பிக்கு வாக்குகள் குறைவடைவதற்கு காரணமென்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் ஜே.வி.பி. எதிர்பார்த்த விதத்தில் சபைகளைக் கைப்பற்ற முடியாது போனமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எமது சேவையின் உண்மைத் தன்மையை உணர்ந்த மக்கள் திஸ்சமஹாராம பிரதேச சபையை நன்றி உணர்வுடன் மீண்டும் எம்மிடம் கையளித்துள்ளனர்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் எமது கட்சிக்கு 55 ஆயிரம் வாக்குகளைப் பெற்றோம். அத்துடன் 24 ஆசனங்களைப் பெற்றிருந்தோம். ஆனால் இம்முறை தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று 42 ஆசனங்களையும் பெற்றுள்ளோம். (ஓ)

## இராணுவத்...

விசேட விமானம் மூலம் பலாலி வந்தடைந்த இவர்களை வரவேற்க யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்திற்கு அழைத்துச் சென்று விரிவான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டார்.

பின்னர் பலாலியிலிருந்து உலங்கு வானூர்தி மூலம்யாழ்.நகரப் பகுதியை வந்தடைந்த அவர்கள் யாழ்.நகரின் 51,55 படைப் பிரிவுகளின் உயர் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து உரையாடினர்.

பின்னர் முகமாலைக்குச் சென்ற அவர்கள் அங்கு முன்னரங்கப் பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையிட்டதுடன் அங்குள்ள இராணுவ அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.

இதேவேளை யாழ்.நகரப் பகுதிகளில் மீட்கப்பட்ட ஆயுதங்களையும் தளபதிகள் பார்வையிட்டனர். (ச-4)

## 3 நாள் உத்தியோக...

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

ஜனாதிபதி நலிவுற்ற நிலையிலிருக்கும் இலங்கை இராணுவத்தின் போர்க்கல சக்தியை பெருக்குவதற்கு பாகிஸ்தானின் உதவியையும் ஆதரவையும் கோரவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்தவின் பாகிஸ்தான் பயணம் குறித்து கருத்துரைத்திருக்கும் பாகிஸ்தான் இராஜதந்திரிகள், ஆயுத வழங்கலுக்கான உடன்படிக்கை ஒன்றை இலங்கையுடன் ஏற்படுத்திக்கொள்வதற்குப் பாகிஸ்தான் தயாராகவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ச-4)


### மின்சார வேலை ஒப்பந்தகாரர் தேவை

சிவன் கோயிலடி சாவகச்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எமது ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலுக்கு மின்சார வேலை (500 point) செய்வதற்கு ஒப்பந்தகாரர் தேவை. இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

வை.சிவராசா,
நிர்வாக உறுப்பினர்.


## பாராளுமன்றத்தைக் கலைத்து...

நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்தவின் அரசு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. அதே நேரம் ஜே.வி.பி. ஒரேஒரு இடத்தை மாத்திரம் வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மீதான மக்களின் ஆதரவு வெளிப்பட்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இத்தகவல் தமது கூட்டமைப்பு அரசிலிருந்து ஜே.வி.பியை வெளியேற்றுவதற்கும் தனியரசு ஒன்றை அமைப்பதற்குமான பாராளுமன்றத்தை விரைவில் கலைத்து விட்டு பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

இனவாதப் போக்குடையவர்களையும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயங்களை குழப்புபவர்களையும் ஓரங்கட்டுவதற்கு மக்கள் உள்ளூராட்சித் தேர்தல் ஊடாக ஆணையிட்டுள்ளதாகவும் தனியரசு ஒன்றை அமைக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எது எவ்வாறாயினும் நாட்டிற்கு நிலையான சமாதானம் ஏற்படுவதற்கு தனி அரசு ஒன்றை அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை எனத்தெரிந்து கொண்ட ஜனாதிபதி மக்களின் ஆதரவுடன் அதனை செயற்படுத்த முடிவு செய்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)









இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.